Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1295)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஐ.ஆகிர் 13 (12.08.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 313

# சர்வதேச நாணய நிதிய இலங்கைப் பிரதிநிதி

# தமிழ்ச்செல்வனுடன் மூன்றுமணிநேரப் பேச்சு!

## முக்கிய பல விடயங்கள் ஆராயப்பட்டன

(கிளிநொச்சி)

**சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜெரமி கார்டர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து - மூன்று மணிநேரத்திற்கும் மேலாக பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போது - இருவரும் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.**

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜெரமி கார்டர் நேற்றுக்காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, தரைவழியாக கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

அண்மையில், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக, நியமிக்கப்பட்டிருந்த ஜெரமி கார்டர் - கிளிநொச்சியில் உள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

நேற்றுக்காலை 11.30 மணிக்கு ஆரம்பித்த இந்தப் பேச்சுவார்த்தைகள், பிற்பகல் 2.40 மணிவரை - சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது.

புலிகளின் சமாதான செயலகப்

(10 ஆம் பக்கம் பார்க்க)



சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்குள்ள முதலீட்டாளர்களுடனான சந்திப்பு நிகழ்வொன்றை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## இன்று கொழும்பு வரும் சொல்ஹெய்ம் கிளிநொச்சிக்கு நாளை விஜயம் செய்வார்

### தமிழ்ச்செல்வனுடன் பேச்சு இடம்பெறும்



(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - இன்று இலங்கை வருகின்றார். இவர் நாளை கிளிநொச்சிக்குச் சென்று, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைவரும் எரிக் சொல்ஹெய்ம் - சமாதான முயற்சிகள் தொடர்பாக இருதரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அரசாங்கம் - விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு குறித்தும், தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் இவர் ஆராயவுள்ளார்.

அத்துடன், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் அரசியற்துறைப பிரமுகர்கள் - பிரான்சுக்குச் சென்று, இடைக்கால நிர்வாக, யோசனை குறித்து ஆராய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கண்ணிவெடி அகற்றும் பிரிவால் கசப்பான நினைவுகள் மீண்டும் தோன்ற வாய்ப்பு!

### 'கல்வ் நியூஸ்' பத்திரிகை தகவல்

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில், இந்தியாவிலிருந்து வந்த கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதற்கு - விடுதலைப் புலிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாக 'கல்வ் நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் சமூகமளிப்பது மீண்டும் மக்களிடையே 1987 - 1990 ஆண்டில் நடைபெற்ற பழைய கசப்பான நினைவுள் மீட்டுக்கொள்வதற்கும் உதவலாம் என, கருத்து வெளியிட்டிருப்பதாகவும் -

தமிழீழ விடுதலைப் புலிகளின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணி அமைச்சரின் விஜயம் நேற்று திடீரென இரத்தானது!

(யாழ்ப்பாணம்)

காணி அமைச்சர் ராஜித சேனாரத்னவின் யாழ்ப்பாணத்திற்கான நேற்றைய விஜயம் - திடீரென இரத்துச் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும், வடக்கு தெற்கு சமாதான விளையாட்டு விழா மற்றும் தேசிய விளையாட்டு விழா தொடர்பான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கு, யாழ். விளையாட்டு உத்தியோகத்தர்கள், யாழ்.செயலக உயரதிகாரிகளுடனான சந்திப்பொன்று - நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் நடைபெறவிருந்தது. இதற்கான அரச உயரதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் பலர் காத்திருந்தனர்.

ஆனால், காணி அமைச்சரின் விஜயம் இரத்துச் செய்யப்பட்டுளளது என்பதையும், சமாதான விளையாடடு விழா மற்றும் தேசிய விளையாட்டு விழா தொடர்பான ஏற்பாடுகளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை மனித உரிமை அமைப்புக்கள் காணாதுள்ளன!

### பொதுஅமைப்புக்கள் குற்றச்சாட்டு

கடந்த 19 வருடங்களுக்கும் மேலாக, இலங்கை ஆட்சியாளர்களால் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் அவமதிக்கப்படுவதையும், தமிழ் அகதிகள் எதுவித வசதிகளுமின்றி அலைந்து திரிவதையும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களும் மற்றும் அமெரிக்க அரசும் புரிந்துகொள்ளாமல் அறிக்கைகள் விடுவதை, பொதுஅமைப்புக்கள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

(முல்லைத்தீவு மக்கள் அமைப்பு உட்பட, இலங்கையில் இயங்கிவரும் பல அமைப்புக்கள், இத்தகைய கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. இலங்கையில் தற்போதைய கொலைகளை, விடுதலைப் புலிகள் மேல் பழிபோட்டு, வெளிவந்த அறிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுமாதா தேவாலயத்திற்கு பெருமளவு பக்தர்கள் வருகை

(மன்னார்)

மடுமாதா வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு - பெருமளவு யாத்திரிகர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், தற்போதே படையெடுத்தவண்ணமுள்ளனர்.

நாளாந்தம் ஐம்பதாயிரத்துக்குக் குறையாத யாத்திரிகர்கள் வருவதாகவும், நேற்றைய தினமும் ஐம்பதாயிரம் யாத்திரிகர்கள் வந்துள்ளதாகவும், இவர்களுக்கான போக்குவரத்து, குடிநீர், சுகாதார வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அந்தக் கால நினைவுகளை சுலபமா மறக்க முடியுமோ...?

## இலங்கையின் பொருளாதார கொள்கை விரைவில் மாறும் என்கிறார் ரணில்!

(கொழும்பு)

சமாதானத்தின் உதயத்தோடு - புதிய பொருளாதாரக் கொள்கையொன்றை வகுப்பதற்கு கவனம் செலுத்துவதாக, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.


கடந்த 20 மாதங்களாக யுத்த நிறுத்த உடன்படிக்கை திருப்திகரமாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. சமாதானப் பேச்சுக்கள் புதிய உத்வேகத்துடன் மீண்டும் தொடங்குவதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

## மஞ்சமதில் வரும் குகனே அருள்!



பழம்பெருமை உரைக்கின்ற நல்லைவளர் முருகையன்
மஞ்சத்தில் உலாவருவான் இன்று!!

முன்னைத்தமிழ்க் கோநகராம் நல்லைவளர் வடிவேலன்
மஞ்சமதில் வருமழகைப் பாடு!

தேவர்மகள் மருங்கசைய வரும்கந்தன் பேரெழிலைப்
பேசரிய மஞ்சமதில் பார்!

மான்மகளைக் கரத்தணைக்கும் குமரேசன் பேரழகை
மின்னொளிரும் மஞ்மதில் காண்!

சூரர்குலச் செருக்கறுத்து அருள்செய்த கதிர்வேலன்
மஞ்சமதில் வரும்அழகைப் பாடு!

ஔவையின்நற் தமிழ்சுவைக்கக் கனிதந்த முருகன் உலா
வரும் மஞ்சத் தழகனைப் பார்!

உளம்நொந்த அருணகிரி துயர்நீங்கித் திருப்புகழால்
துதித்தவனை மஞ்மதிற் காண்!

தமிழ்ச்சங்கத் தமர்ந்திருந்து தமிழ் வளர்த்த வேலவனைத்
தவறாது மஞ்சமதில் துதி!

தேவருடன் நின்றதுபோல் எம்முடனும் நிற்கும்வண்ணம்
மஞ்சமதில் வரும்குகனை வேண்டு!

தஞ்சமென்று வருவோரை அரவணைக்கும் முருகோனை
மஞ்சமதிற் கண்டுபுகழ் பாடு!

மானமுடன் நம்தமிழர் வாழ்ந்திருக்க அருளும்வண்ணம்
மஞ்மதில் வருவோனை வேண்டு!

வேண்டுவன தேக்கிடவும் வேண்டாதவை நீக்கிடவும்
வேலவனின் நல்லருளைத் துதி!

பல்லாண்டாய் பலமுறையாய்ப் பதம்பணிந்து இரக்கின்றோம்
பைந்தமிழர் வாழ்வொளிரச் செய்!

தமிழ்த்தெய்வம் நீயென்றால் தமிழுனது வடிவமென்றால்
தமிழர்துயர் துடைக்களன்ன தடை?

நம்மண்ணை நாம்மீட்டு நம்மைநாம் ஆண்டிருக்க
மஞ்சமதில் வரும்குகனே அருள்!!

வயலூர் முருகன்

# சாவகச்சேரி தபாலகத்திற்கு புதிய கட்டடம்; ஊடகத்துறை அமைச்சர் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த நடவடிக்கையினால், சேதமுற்று எதுவித வசதிகளுமற்ற நிலையில் இயங்கிவந்த சாவகச்சேரி தபால் நிலையத்திற்கான, புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று நடைபெற்றது.

இந்த அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு - பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக - வடமாகாண அஞ்சல் அதிபர் என்.ஜெயரட்ணம் வருகைதந்திருந்தார். அடிக்கல்லினை, நாடாளுமன்ற உறுப்பினரான ரவிராஜ் நாட்டிவைத்தார்.

இக்கட்டட நிர்மாணத்திற்கான நிதியான 40 இலட்சம். ரூபாவை, மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்- விசேட நிதியிலிருந்து வழங்கியுள்ளார்.

கடந்தகால யுத்த அனர்த்தத்தினால் சேதமடைந்த இந்தத் தபாலகத்தினை திருத்துமாறு - அப்பகுதி மக்களும், பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கணித, விஞ்ஞான ஆசிரியர்களின் ஐந்துநாள் கல்விச் செயலமர்வு

ஜப்பான் நிறுவனத்தின் அனுசரணையுடன் - இலங்கையில் கணித, விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கான ஐந்து நாள் செயலமர்வு ஒன்று இடம்பெற்றது.

கடந்த திங்கள் முதல் வெள்ளி வரை இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் இச்செயலமர்வு நடைபெற்றது. இச்செயலமர்வின் இறுதிநாள் கருத்தரங்கில், ஜப்பானியத் தூதுவரும் பங்குபற்றினார்.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற இச்செயலமர்வில், வட - கிழக்கில் மூன்று பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன.

வேம்படி மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம், திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரி ஆகியவற்றுக்கே இந்தச் செயலமர்வுக்கான அழைப்புக்கள் விடப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலையின் அதிபர்களும், அப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் மூவரும் அழைக்கப்பட்டார்கள்.

இச்செயலமர்வு தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகிறது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் அஜித், சிம்ரன் நடித்த
வாலி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
BLUE STREAK
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.
14ம் திகதி வரை
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்
பிரியமான தோழி
10.30, 2.30, 6.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
இயக்கம்: விக்ரமன்

மலிவு விலையில் புத்தகங்கள்
நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு
ஆகஸ்ட் 03 முதல் 30 வரை
புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்
(நல்லூர் சிவாலயம் முன்பாக)
சகல புத்தகங்களுக்கும் 10 % கழிவு
சிறுவர் கதைகள், பாடல்கள், சிறுகதை, நர்வல்கள், ரமணி சந்திரனின் சகல கதைகளும், இந்து சமய நூல்கள், தமிழ் இலக்கிய நூல்கள், கம்யூட்டர் நூல்கள், ஆங்கிலம், தமிழ் சிங்கள அகராதிகள், பாடசாலைப் புத்தகங்களுக்குரிய செயல் நூல்கள் பயிற்சிகள் வினா-விடைகள் இன்னும் பல.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 021-2222573
(சி-1339)

ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி - தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்
சுரபி பதிப்பகத்தினர்
பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்
உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.
குறைந்த கட்டணம்
குறுகிய தவணை
உங்கள் ஆக்கங்கள் உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்
இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.
உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2223922 2225107

# உண்மை நிலையை அறிந்து கொள்ளவே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளேன்!

## 'காலச் சுவடு' இதழின் ஆசிரியர் கூறுகிறார்

"ஈழத்தமிழர்களுக்கும் எனக்கும் இடையேயான உறவில் ஏற்பட்ட தொய்வை சரி செய்வதற்காகவே, யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தேன்."

- இவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும். 'காலச்சுவடு' இதழின் ஆசிரியர் கண்ணன் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற ஈழத்து இலக்கியவாதிகளுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கண்ணன இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்

தமிழ் நாட்டில் வெளியாகும் அநேகமான ஊடகங்களைப் பார்ப்பதன் மூலம் மட்டும் ஈழத்தமிழர்கள் பற்றிய தெளிவான அபிப்பிராயம் ஏற்படாது. ஏற்படவும் முடியாது. எனவே, உண்மை நிலையை அறிவதற்காகவே, நான் இரண்டாவது தடவை இலங்கைக்கு வந்தபோது, யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தோம்.

நீண்டகாலங்கள் இங்கு தங்கி நின்று நிலைமைகளை ஆராய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். ஆனால், அதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் ஒரு நாளிலேயே திரும்ப வேண்டியுள்ளது.

இந்திய சினிமாத்துறை பற்றி அவர் கருத்துத் தெரிவித்தபோது, வெளிவரும் திரைப்படங்களில் காட்சி அமைப்புக்கள் சகிக்கமுடியாதவையாகவுள்ளன. இதனால்தான் பல வருடங்களாகவே தமிழ்த் திரைப் படங்கள் பார்ப்பதைத் தவிர்த்து வருகின்றேன். திரைப்படங்களாலும் சின்னத்திரை தொடர்களாலும், தமிழ் நாட்டில் வெளியாகும் இதழ்களின் விற்பனை குறைந்துள்ளபோதும் ஆழமான வாசிப்பு எனும் பழக்கத்தில் இதுவரை அவ்வளவாக மாற்றம் ஏற்படவில்லை.

நாம் எமது 50 ஆவது சிறப்பு மலரை விரைவில் வெளியிடவுள்ளோம். அதில் ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவுள்ளோம். அது பற்றிய ஈழப் படைப்பாளர்களின் தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம். இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதே எமது பிரதான நோக்கமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது ஈழத்துப் மூத்த படைப்பாளிகள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமை மீறல்கள் அறிய சர்வதேச கண்காணிப்புக் குழு!

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு, அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இயங்கவுள்ளது.

இந்தக் கண்காணிப்புக் குழுவில்- ஐக்கிய ஆமெரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

பவ்ரல் அமைப்பின் கீழ் இந்தக் குழு இயங்கவுள்ளது.

சமாதான உருவாக்கலை கண்காணித்துவரும் - இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் விடயத்தில் செயற்படும் விதம் திருப்பதியளிக்காமையால் - இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக, பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு, வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் இயங்கவுள்ளது. வடக்கு - கிழக்கு உட்பட, இவர்கள் ஏனைய பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கைகளை வெளியிடுவதுடன், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக - சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்களின் கவனத்திற்கும் கொண்டுவரப்படும்.

ஆரம்பத்தில் 12 அங்கத்தவர்களுடன் இயங்கும் இந்த அமைப்பு, பின்னர் 50 பேராக அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரச ஊழியர்கள் உதவ வேண்டும்!

### தமிழ்ச்செல்வன் கோரியுள்ளதாக கொழும்பு பத்திரிகை தகவல்

கிழக்கு மாகாணத்தை முன்னேற்றுவது தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு, மட்டக்களப்பு அரசாங்க அதிபர், திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் ஆகியோரைத் தயாராகுமாறு, புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளதாக, கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற சந்திப்புகளின்போதே, விடுதலைப் புலிகளின் புனர்நிர்மாணப் பணிகளை செயற்படுத்துவதற்கு அரசாங்க அதிபர்களைத் தயாராகுமாறு, தமிழ்ச் செல்வன் கேட்டிருந்தார்.

கிளிநொச்சி அரசாங்க ஊழியர்கள், விடுதலைப் புலிகளின் முன்னேற்றச் செயற்பாடுகளில் உதவி செய்வதைப்போன்று, திருமலை, மட்டக்களப்பு அரச ஊழியர்களும் உதவ வேண்டுமென அவர் கேட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது - ஆட்கள் பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை காரணமாக விடுதலைப் புலிகளின் அபிவிருத்திப் பணிகளைத் தம்மால் நன்கு செயற்படுத்த முடியாதுள்ளதாக அரசாங்க ஊழியர்கள் கருத்துத தெரிவித்தனர்.

இடைக்கால நிர்வாக அமைப்பு விரைவில் செயற்படவுள்ளதாகவும் இதில் கிடைக்கும் நிதியின்மூலம் அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்த முடியும் எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# 'எதிர்கால எழில்' சிறுவர் சேமிப்பு கணக்கு! சமூக பொருளாதார வங்கியால் அறிமுகம்!

சேமிப்பு பழக்கத்தை சிறு பராயத்திலிருந்தே ஆரம்பிப்பதற்காக, சிறார்களுக்கு 'எதிர்கால எழில்' என்ற சேமிப்புத் திட்டத்தை, சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய கணக்கின் பிரகாரம், பணத்தொகை அதிகரிப்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் முதலீட்டின் பெறுமதியும் உறுதிப்படுத்தப்படுகிறது.

இதற்கான நடப்பு வட்டி 12% ஆகும். இந்தத் திட்டத்தில் - முன் பள்ளிகளிலிருந்தே, சிறார் சேமிப்பு வாரத்தை அறிமுகம் செய்து அங்கேயே கணக்குகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

சிறார்கள் ஒவ்வொருவருக்கும் சேமிப்பு உண்டியல் ஒன்றும் வழங்கப்படுவதுடன், இதன்மூலம் சிறார்கள் தாமாகவே சேமிப்புச் செய்யும் பழக்கத்திற்குள்ளாவார்கள். தொடர் நடவடிக்கையாக சேமிப்புச் சான்றிதழ்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சான்றிதழ் 6 வருடகால முதிர்வைக் கொண்டதாகவும், 500 ரூபாவின் மடங்குகளை வைப்பிலிட்டு அதன் இரு மடங்குக்கு மேலான பெறுமதியான சான்றிதழ்களையும் சமூக பொருளாதார வங்கி வழங்கவுள்ளது.

சிறார்களின் மருத்துவம், கல்வி போன்ற தேவைகளுக்கு மட்டும் விசேட அனுமதிக்கமைய பணத்தை மீளெடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. சேமிப்பைப் கொண்டிருக்கும் 100 பேருக்கு, 500 ரூபாவுக்கு குறையாத பெறுமதியுடைய பாடசாலை உபகரணங்களும் பரிசாக வழங்கப் படவுள்ளது.

சிறார் உண்டியலில் சேமிப்புச் செய்யப் பெறுகின்ற தொகையில் 25 % ஆன தொகையை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சர்வதேச சிறுவர் தினத்தன்று ஊக்குவிப்பாக இரண்டு ஆண்டுகளுக்கு வழங்க முன்வந்துள்ளது.

# 116 பேரை நாடுகடத்துமாறு ஜோன் அமரதுங்க உத்தரவு

(கொழும்பு)

இத்தாலிக்குச் செல்லவிருந்தபோது, கைதுசெய்யப்பட்ட சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் 116 பேரையும், உடனடியாக நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் குறித்து, இலங்கையிலுள்ள தூதுவராலயங்களுடன் கலந்தாலோசித்து - தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் இன்று வரை கைதுசெய்யப்பட்டவர்களில், 116 பேரின் விசாரணைகள் முடிவடைந்திருப்பதாக, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார்.

கடந்த ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இன்றுவரை, 674 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மலசலகூடங்கள் நெடுங்கேணியில் அமைப்பு!

நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் - போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன், நெடுங்கேணிப் பகுதியில் 72 மலசல கூடங்களை அமைத்திருப்பதாக, நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித்தனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்த மக்களின் சுகாதார வசதிகளை கருத்திற்கொண்டு- பெரிய மடு, நயினாமடு, சன்னாசிப்பரந்தன் ஆகிய பகுதிகளிலேயே 72 மலசலகூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

### க.பொ.த. உயர்தரப் பரீட்சை

# பாடசாலைகள் சில பெற்ற முன்னணிப் பெறுபேறுகள்!

**யாழ். இந்துக்கல்லூரி**

**கணிதப் பிரிவு**

செ.ஐங்கரன் 3A வி.சசிஅன்ரன் 3A, கோ.சுதர்சன் 3A, சி.சபேசன் 3A, ஜோ.சிவனுஜன் 3A, க.ரிஷிகேஷன் 3A, பி.ராஜராஜன் 3A.

**உயிரியல் பிரிவு**

வி.சுதாகரன் 3A, எ.இ.கிஷோக் 3A, தி.ரஜீவன் 3A, மு.வாகீஸ்வரன் 3A.

**வர்த்தகப் பிரிவு**

பு.கஜன்நாத் 3A, ச.பிரகாஷ் 3A

**பரியோவான் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

த.பவானந்தன் 3A, நா. சிவகரன் 3A, இ.தேவமாறன் 3A, ச.கர்ணன் 2AB,செ.செல்வரஞ்சன் 2AB, உ.செந்தூரன் 2AC,

**உயிரியல் பிரிவு**

வி.தனுசன் 2AB, கு.ஹரிசன் 2AC.

**வர்த்தகப் பிரிவு**

கி.பிரதீபன் 3A, பு.பிறேம்காந் 3A, சி.திவாகரன் 3A, ம.ரவிசங்கர் 3A, பு.பிரதீப்காந்த் 2AB, ந.ரஜீவ், செ. உமாசங்கர் 2AB.

**கலைப் பிரிவு**

வி.சஞ்யேந்திரா 2AB, இ.கெனத் 2AB.

**வேம்படி மகளிர் கல்லூரி**

**உயிரியல் பிரிவு**

ரா.ஜசித்தா 3A, க.மகிழினி 3A, தி.ஜனோயினி 3A, ம.ஹரிஷாந்தி 2AB, பு.ஷர்மிளா 2AB, கு.வேணி 2AB, ம.கௌரிகா 2AB, பு.ஷர்மிளா 2AB, கு.வேணி 2AB, ச.சுகர்திகா 2AB

**வர்த்தகப் பிரிவு**

த.டிலக்ஷி 3A, வோ.சாயிசுதா 3A, செ.யாழினி 3A, த.ராகவி 2AB, கு.சிவகௌரி 2AB , ஏ.சிவதர்சினி 2AB, த.கீத்தலதா 2AB , வை.ராகினி 2AB , த.சுகரூபா 2AB , ர.நிரஞ்சனி 2AB , து.பிரியதர்ஷினி 2AB .

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

**வர்த்தகப் பிரிவு**

ர.நர்ஷிலா 3A, சி.தாட்சாயினி 3A, க.வரநிதி 3A

**கலைப் பிரிவு**

ச.தாட்சாயினி 3A, சி.காயத்திரி 2A B, செ.கௌசல்யா 2AB, சி.கார்த்திகா 2A B, க.மதுராம்பிகை 2A B, ஸ்ரீஸ்ரீபிரபாலினி 2AB, த.வஸ்தலா 2AB, செ.வசந்தகுமாரி 2A B, க.பாமினி 2AC, க.நர்மதா 2AC, க.சபிதா 2AC.

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

**வர்த்தகப் பிரிவு**

இ.மேரி வஸ்தலா 3A.

**கலைப் பிரிவு**

அ.தர்மினி 3A, சி.றிசாந்தி 2AC, இ.இரட்ணேஸ்வரி 2AC.

**உயிரியல் பிரிவு**

யோ.திவ்யா 2AC.

**அருணோதயக் கல்லூரி**

ர.பிரகாஷ் 2AB, சு.சுகிர்தா 2AB , இ.விஜிதா 2AB.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

பா.மோகன்ராஜ் 3A

**வர்த்தகப் பிரிவு**

நா.கஜேந்திரா 3A, சி.பிரதீபன் 3A, சு.றஜீபன் 3A, சி.சஜிதா 3A

சி.அம்பிகா 2AB, இ.ரதீபா 2AB, ம.ரேகாலினி 2AB ஆ.ஜெயரூபன் 2AC

**இராமநாதன் கல்லூரி**

பா.நஜந்தினி 3A, வி.கஜேந்தினி 3A, வை.கலைவாணி 3A, பே.கௌரி 3A, ந.மாலதி 3A.

**மகாஜனக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

வை.பிரகலாதன் 3A, தினேஸ்குமார் 2AB, கர்ணஜோகினி 2AB.

**கலைப் பிரிவு**

த.மகிஜினி 3A, சர்மிளா 3A, சுதர்சினி 3A, விஜிதா 3A

**இணுவில் மத்தியகல்லூரி**

**கலைப் பிரிவு**

இ.ரேகா 2AC

**கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

ம.ரஜிவ் 2AB, ந.கஜந்தினி 2AB, தெ.நாகதர்சினி 2AB, கா.கஸ்தூரி 2AC.

**கலைப் பிரிவு**

அ.அஜித் சஞ்சீவ் 2AC.

# தென்பகுதியில் கடமையாற்ற[illegible] வைத்தியர்கள் விரும்புகிறார்கள்!

### வைத்திய அதிகாரி குமாரவேற்பிள்ளை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக - மருத்துவபீட பட்டதாரிகள், வடக்கு - கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரிவதற்கு விருப்பம் காட்டவில்லை. இதனால், வேறு பகுதிகளிலிருந்து வைத்தியர்களை இங்கு சேவை செய்வதற்கு நியமிக்க வேண்டியுள்ளது.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார வைத்திய அதிகாரி குமார வேற்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். மருத்துவபீடத்திலிருந்து வெளியேறுவோரில் அதிகமானவர்கள் - கொழும்பு, கண்டி, காலி ஆகிய பகுதிகளில் கடமைபுரிவதையே விரும்புகிறார்கள். தெற்கிலுள்ள வைத்தியசாலைகளில் தேவைக்கு மேலதிகமாக தமிழ்வைத்தியர்கள் கடமையில் உள்ளார்கள் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே - யாழ்.போதனா வைத்தியசாலையின சில பிரிவுகளில் பிரத்தியேகமாக பயிற்சிபெற்றவர்கள் இல்லாததால், அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக, யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் சதுர்முகன் தெரிவித்தார்.

# 81.5 கிலோமீற்றர் கடற்கரை உயர்பாதுகாப்பு வலயத்தில்!

யாழ். குடாநாட்டில் 81.5 கிலோமீற்றர் நீளமான கடற்கரைப் பரப்பு இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்களின் மீள்குடியமர்வுக்கும் இயல்பான கடற்தொழிலுக்கும் இடையூறாக இருப்பதாகச் சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பாதுகாப்பு வலயத்தில் வலி.வடக்கு அரியாலை, தென்மராட்சி, கிளாலி,, நாகர்கோவில், மண்டைதீவு ஆகிய கடற்கரைப் பிரதேசங்களை சேர்ந்த 4436 மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 20 அண்டு கால யுத்தத்தால் இடம்பெயர்ந்த 16 பாடசாலைகள் 246 ஆலயங்கள் அடங்கலாகவுள்ள 67 கிராமசேவையாளர் பிரிவுகளிலுள்ள நிலப்பகுதி ஆள் நடமாட்டம் அற்று உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

# சங்கானை வைத்தியசாலையை தரமுயர்த்தக்கோரி

# கிராம அபிவிருத்திச் சங்கம் ஆளுனருக்கு மகஜர்!

(சங்கானை)

சங்கானை அரசினர் வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்துமாறு கோரி, சங்கானை கிராம அபிவிருத்திச்சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கடந்த புதன்கிழமை காலை சங்கானை அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்விலேயே இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளை, யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.ரி.சிவபாதம், யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி. வி.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சங்கானை வைத்தியசாலையைத் தரமுயர்த்தக் கோரி வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்காகக் கையளிக்கப்பட்ட மகஜரில், மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலமாக இயங்கி வருகின்ற இந்த வைத்தியசாலை, அன்று தொட்டு இன்றுவரை சங்கானை மக்களுக்கு மட்டுமல்ல, ஏனைய கிராம மக்களுக்கும் தன்னால் இயன்ற சேவையைத் திறம்படச் செய்து வருகின்றது.

சங்கானை ஒரு பெரிய கிராமம். அதை சுற்றி பல சிறு சிறு கிராமங்கள் உண்டு. இப்பிரதேசம் ஒரு விவசாயப் பிரதேசம் என்று கூறலாம். வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பங்கள் பல இப்பிரதேசத்தில் உள்ளன. இச்சிறு கிராமங்களுக்கு மத்தியில் சங்கானை அமைந்து இருப்பதே, இவ்வைத்தியசாலை இங்கே அமையக் காரணமாக இருந்தது.

சாதாரண, சமாதான காலத்தில் பெருந்தொகையான மக்களுக்கு அளப்பெரிய சேவை செய்த இந்த வைத்தியசாலை, போர் காலத்திலும் பெருந்தொகையான காயமுற்றோருககும். ஏனைய நோய்களால் பாதிப்புற்றோருக்கும் கடைசிவரை சேவை செய்ததை இப்பிரதேச மக்களுக்கு மட்டுமல்ல, யாழ்.குடாநாட்டு மக்களுக்கும் தெரிந்த ஒரு விடயமாகும்.

இப்பொழுது மீளக்குடியமர்வு நடைபெறுகின்ற சூழலில், பலவித நோய்களுக்குள்ளான பெருமளவு மக்கள் இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர்களாகவும், விடுதிகளில் தங்கி வைத்தியம் பெறுவோராகவும் வந்து, செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இந்த வைத்தியசாலை யாழ்ப்பாணம், மந்திகை போன்ற இடங்களிலுள்ள நோயாளர் நெருக்கடியைப் போன்ற ஒரு நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதால், இந்த வைத்தியசாலையை - மாவட்ட வைத்தியசாலைத் தரத்திற்குத் உயர்த்துமாறு, மக்களின் நல்வாழ்வின் பெயரில் தங்களை மிகப் பணிவன்புடன், தயவாக்க் கேட்டுக் கொள்கிறோம் என்று அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவுக்கு மின்சாரம் வழங்க 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு நகரப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காகச் சுமார் 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதும், இதுவரை எந்தவித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

முல்லைத்தீவில் மக்கள் பெருமளவில் குடியமர்ந்து - அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் இயங்க ஆரம்பித்தநிலையில், மின்சாரத்தின் தேவை மிகவும் அவசியமாகவிருக்கின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் - இவற்றைக் கவன்த்தில் கொண்டு, மின்சாரம் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (122)

## சமுர்த்தி முகாமையாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை

(நவிண்டில்)

கொழும்பு சமுர்த்தி அதிகார சபையில் - நாளை புதன்கிழமை பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சிநெறியினை நடத்துவதற்குரிய, சமுர்த்தி முகாமையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் சமுர்த்தி முகாமையாளருக்கான பயிற்சிநெறி - எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல், 19 ஆம் திகதிவரை தலங்கம பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

# கப்பலேந்தி மாதா ஆலயத் திருவிழா


(வடமராட்சிக் கிழக்கு)

வடமராட்சிக் கிழக்கு - கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத் திருவிழா கடந்த 12 ஆண்டுகளின் பின், எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவ நடவடிக்கையால் முற்றாகச் சேதமடைந்த இவ்வாலயம், இப்போது கொட்டகை அமைத்து, திருவிழா நடைபெறுகிறது.

இவ்வாலயத்தில் கடந்த புதன் கிழமை கொடியேற்றத்துடன், நவநாள் ஆராதனைகள் ஆரம்பமாகியது. எதிர்வரும் 14 ஆம் திகதி நற்கருணை விழாவும், திருப்பலியும் இடம்பெறும் எனப் பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (17)

## படங்களும், செய்திகளும்



யுத்த அனர்த்தங்களினால் மூடப்பட்டிருந்த மயிலிட்டி வடக்கு அ.த.க. பாடசாலை அண்மையில் மீள ஆரம்பிக்கப்பட்டது. இந்த வைபவத்தில் கலந்துகொண்ட திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சச்சிதானந்தன் உரையாற்றிக்கொண்டிருப்பதையும், ஜி.ரி.இசற் நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் ஜோர்கன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், பாடசாலை அதிபர் வாமதேவன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனமும், வலி மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து, அண்மையில் நடாத்திய கண்காட்சி - யாழ்.அராலி இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட காட்சி ஒன்றைப் படத்தில் காணலாம் (118)

# மக்கள் வங்கியின் பயிற்சிப் பட்டறையை தமிழ்மொழியில் நடத்துவது சிறப்பு!

## பேராசிரியர் சிற்றம்பலம் உரை

தமிழ்மொழியை - அரச மொழியாக்கல் சட்டம், 1977 இல் கொண்டு வரப்பட்டது. இன்றுவரை அது முற்றுமுழுதாக அமுல்படுத்தப்படவில்லை. வடக்கில் நடைபெறும் வடமாகாண மக்கள் வங்கி உதவி [illegible]ளர்களுக்கான, தலைமைத்திறன் தொடர்பான பயிற்சிப் பட்டறை - தமிழ்மொழியில் நடைபெறுவது அச்சட்ட அமுலாக்கலுக்கு அமைவானதாகும் எனப் பேராசிரியர் சிற்றம்பலம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ். பல்லைக்கழகத்தில் நடைபெற்ற, மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர்களுக்கான தலைமைத் திறன் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் மத்தியில் நேர்மை, விசுவாசம், உண்மைத் தன்மை என்பன குறைந்தே காணப்படுகின்றன. இவை எமது பிரதேச மக்களால் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். எம் மத்தியிலுள்ளவர்களுக்கு மீளவும் அவற்றைக் கொண்டு வர - மக்கள் வங்கியின் தமிழ் மொழி மூலமான பயிற்சிப் பட்டறை வழிவகுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராஜசுந்தரம், வணிகத்துறைத் தலைவர் தேவராஜா, முகாமைத்துவ கற்கைநெறித் தலைவர் திருமதி. சிவாஸ்கரன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## நான்கு இந்திய மீனவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் கடற்பரப்பில் அத்துமீறி, கடற்தொழிலில் ஈடுபட்ட நான்கு இந்திய மீனவர் - பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை சுழி புரம் கடற்பரப்பில் அத்துமீறிக் கடற் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, அப்பகுதி மீனவர்களால் இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

மேற்படி நான்கு இந்திய மீனவர்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு கடற்படையினரும், பொலிஸாரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து - நேற்று முன்தினம் நள்ளிரவு, நான்கு இந்திய மீனவர்களையும் - சங்கானைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## விவசாய, ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(நவின்டில்)

கரவெட்டிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், இன்று காலை 10 மணிக்கும், தொடர்ந்து 11.30 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

இபபிரதேசத்திலுள்ள சகல திணைக்களத் தலைவர்களையும், நிறுவனப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (116)

## மட்டுவில் பாடசாலைக்கு 7 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(வடமராட்சி கிழக்கு)

மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்திற்கு ஜி.ரி.இசற் நிறுவனம் - 7 இலட்சம் ரூபா செலவில் வகுப்பறைகளைப் புனரமைத்துள்ளது.

வித்தியாலயத்திற்கு - மாணவர்கள், ஆசிரியர்களுக்குரிய தளபாடங்கள் - ஜி.ரி.இசற் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன், மலசலகூடங்கள் - ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் - நூலகமொன்றும், ஆய்வுகூடமொன்றும் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையைக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

## அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் மஹோற்சவம்

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று, எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்திருவிழாவும், 23 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

மஹோற்சவ காலங்களில் - ஆலய சூழலில் கலை நிகழ்வுகளும், நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : தி.அபிவர்ணா
முகவரி : 300, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------
பெற்றார் ஒப்பம்

# தாய்வானில் பன்றி வேள்வி



எமது நாட்டில் கவுணாவத்தை போன்ற கோயில்களில் வேள்விக்காக ஆட்டுக்கடாககளை வளர்ப்பது பற்றி அறிந்திருப்பீர்கள்.

யார் பெரிய ஆட்டுக் கடாவை வேள்விக்குக் கொண்டுவருவது, என்ற போட்டியில் இவற்றை வளர்ப்பவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பார்கள். இது போன்று தாய்வானில் மதசடங்குகளில் பலியிடுவதற்காகவே அதிகநிறைகொண்ட பன்றிகளை வளர்க்கின்றார்கள். இவை 900 கிலோ கிராமிற்கு மேற்பட்டநிறையைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. இப்பன்றிகளுக்கு உணவை வலிந்து ஊட்டுகின்றார்கள் - நமது நாட்டு கடா வளர்ப்பாளர்களைப்போல.



இயற்கைக்கு மாறாக அதிக நிறைகொண்டனவாக இவை இருப்பதால், கொல்லப்படும் இடத்திற்கு நடந்து வருவதற்குகூட இவற்றால் முடிவதில்லை. ஆயிரக்கணக்கான மனிதர்கள் சூழ்ந்திருக்கும் கொலைக் களத்திற்கு இழுத்துக் கொண்டே வருகின்றார்கள். "கக்காஷ்" இன மக்களிடையே காணப்படும் மதம் தொடர்பான நம்பிக்கையால், இக்கொலைகள் செய்யப்படுகின்றன.

இரண்டு ஆண்டுகள்வரை பன்றியொன்றை வளர்த்தெடுக்கிறார்கள். பன்றிகளைச் சிறிய இடத்தில் அடைத்து வைத்து, அதிகநிறைக்காக மணல், ஈயம் போன்றவற்றையும் வலிந்து ஊட்டுவார்கள். மணல்; ஈயம் போன்றவற்றை ஊட்டுவதன்மூலம், அதிகநிறைகொண்ட பன்றியை வளர்க்கமுடியும் என்று, தாய்வான் நாட்டவர்கள் கூறுகின்றனர்.

தாய்வானிலுள்ள மிருகங்கள் வதைக்கான அமைப்பு இவற்றைக் கண்டித்துள்ளது.

# மரங்களில் உருவாகும் அம்பரின் இரகசியம்



அம்பர் எனப்படும் பொருள் மரங்களின் பிசின் உருவில் சுரக்கப்படுகின்றது. இவை பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன், இறுகிக் கல்லாய்ப்போன நிலையில் காணப்படுகின்றன. இவற்றுள் சிக்கியுள்ள பூச்சிகள் - தாவரங்களுக்கு எதுவித பாதிப்புமின்றி நீண்டகாலத்திற்குக் காணப்படும்.

அண்மையில் ஜெனிற்றில் காணப்பட்ட அம்பரில் -· சிலந்தி ஒன்றின் நூல் இழை காணப்பட்டது. இது நூற்றி இருபது மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறியப்பட்டுள்ளது. இது லெபனானில் 1969 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் முக்கியத்துவம் அண்மையில் தான் உணரப்பட்டது. அதில் காணப்பட்ட நூலுக்குமேல், ஒட்டிக்கொள்ளக்கூடிய பொருள் ஒன்று காணப்பட்டது. இவை தற்காலத்தில் சிலந்திகளின் உடலிலிருந்து சுரக்கும் ஒரு திரவத்திலும் காணப்படுகின்றது. இத்திரவம் ஒட்டிக்கொள்ளும் தன்மையைக் கொண்டிருக்கிறது.

# திரை விமர்சனம்

## விகடன்



த்ரில் - படங்களை வெறும் த்ரில்லாகவே பார்த்துப் பழகியவர்களுக்கு, குடும்பக் கதையுடன் கலந்து, ஒரு சாம்பாராக வழங்கி இருக்கிறார் அருண்பாண்டியன். ருசி குறையாத சாம்பார் என்பதால், பரவாயில்லை.

அமெரிக்கா - ஹரிஸ் ராகவேந்தர், மல்லிகைப்பூ, பட்டுப்புடவை சகிதம் வளையவரும் காயத்திரி ரகுராமை விரும்பி, மணந்துகொள்கிறார். ஆனால் - அவரோ குடி, சிகரெட் என்று நவீன உலகத்தின் மற்றொரு வடிவமாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து விடுகிறார்.

குடிபோதையில் - "வைத்துக்கொள் உன் தாலியை" என்று அறுத்துக் கொடுக்கும் அவளுக்கு, ஆக்ரோஷமாக ஒரு அடி கொடுக்க, சொர்க்கமோ,நரகமோ, 'டிக்கற்' வாங்கிக்கொள்கிறாள்.

அதன் பின், நெடுஞ்சாலையில் செல்லும் லொறி போன்று வேகம் எடுக்கிறது படம்! நடிகராகச் சாதித்ததைவிட, இயக்குநராகச் சாதித்திருக்கிறார் அருண்பாண்டியன்.

பாடகராக அறிமுகமான ஹரிஸ் ராகவேந்தர் (நிற்பதுவோ நடப்பதுவோ புகழ்) ஹீரோவாகப் புது அவதாரம் எடுத்திருக்கிறார்.

பணக்கார இளைஞனுக்குப் பொருத்தமான முகம். அதில் - விநாடிகளில் குணம் மாற்றும் வித்தையில் பிரமிக்க வைத்திருக்கிறார். சொந்தக்குரலில் அவர் பேசும் வசனங்கள் - பாடுவதுபோல் இருக்கின்றது. அழகு! அற்புதம்! சிரத்தை எடுத்து படங்களை ஒப்புக்கொண்டால், முன்னணி ஹீரோவாகும் வாய்ப்புகள் இருக்கிறது.

சில காட்சிகளிலே வந்தாலும், பளிச்சிடுகிறார் உமா.

அலுவலகத்திலிருந்து காணாமல் போய்விடும் உமாவைத் தேடும் பொலிஸ் அதிகாரி, அருண்பாண்டியன்- அடிக்கடி ஹரீஸ் வீட்டிற்குப் போய்த் தொந்தரவு செய்வதும், பொலிஸ் அதிகாரியான நாசர் குறுக்கிட்டு ஹரீசைக் காப்பாற்றுவதும், சுவாரசியமான கதையோட்டம்.

அருண்பாண்டியனின் மனைவி ராதிகா சௌத்ரி, கதையின் வேகத்தையும் தின்று தொலைக்கிறார். கவர்ச்சியின் பெயரால் படத்தைக் கவிழ்க்கிறார்கள்.

ஜெரோம் புஸ்பராஜ் - துள்ளல் மிகுந்த இசையமைப்பாளர் ஒருவர் கிடைத்திருக்கிறார்.

குறிப்பாக, பின்னணி இசையில் இவர்கள் அட்டகாசமாகச் செய்திருக்கிறார்.

மற்றும், வேலு பிரபாகரன் கமெரா அழகையும், திரிலையும் ஒரேநேரத்தில் வழங்கியிருக்கிறார். 'அந்த நள்ளிரவில்' விபத்துக் காட்சி - பார்ப்போரை மிரட்டுகிறது.

விகடன் - தலைப்பையும்; கதையையும் ஒட்டவைக்கும் வேலைகளை மறந்துவிட்டு யோசித்தால், பரவாயில்லை.

# உயிர்காக்கும் விளக்கு



அட்லாண்டிக் பெருங்கடலைக் கடக்க மேற்கொள்ளப்பட்ட மிகச்சிரமமான பயணம் அது. அதுவும் ஐந்து வார கடற்பிரயாணம். அது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. பிரயாணிகள் அனைவரும் கரையைக் காணத் தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தனர். அந்த சமயத்தில்தான் ஓர் ஒளி தோன்றியது. அடிவானத்தில் ஏகாந்தமான ஒரு நட்சத்திரம். ஆனால், அது நட்சத்திரமல்ல, கலங்கரை விளக்கம். "அந்த ஒளியைக் கண்டவுடன் நாங்கள் எல்லாரும் முழங்காலிட்டு, கடவுளுக்கு நன்றி சொன்னோம்" என்று ஒரு பிரயாணி உணர்ச்சி மேலிட கூறினார். அந்த ஒளி - அவர்கள் செல்லவேண்டிய இடத்திற்குப் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்தது. ஆனால், இதற்கு முன், மேற்கொண்ட எல்லாக் கடற்பிரயாணங்களும் இதுபோல் சுகமாய் முடியவில்லை.


1839 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி வட அமெரிக்காவின் நியூ இங்கிலாந்து கடற்கரை நல்ல பிரகாசமான நாள். வானமும் நிர்மலமாகக் காட்சியளித்தது. மாஸசூஸட்ஸில் உள்ள ப்ளம் தீவில் ஒரு கலங்கரை விளக்கம். அன்று வானம் தெளிவாக இருந்ததால், இருள் கவிந்து வருவதற்குமுன் சின்னஞ்சிறு துடுப்புப்படகில் தன் மனைவியோடு கடைக்குச் சென்று, பத்திரமாகத் திரும்பிவிடலாம் என அதன் காவலர் கணக்குப் போட்டார். ஆனால், அவர் போட்ட கணக்கு தவறாகிவிட்டது. அவர்கள் போயிருக்கும்போது, காற்று தன் சீற்றத்தைக் காட்டத்தொடங்கியது. சடுதியில் புயல். கண்மூடி திறப்பதற்குள் வானத்தையும்,கடலையும் மேகமூட்டம் மறைத்தது. செவிப்பறையைக் கிழிக்கும் பேரிரைச்சலோடு மழை - நுரையையும் நீர்த்துளிகளையும் வாரியிறைத்தது. அந்தக் கலங்கரைவிளக்கத் தீவிற்குத் திரும்ப, காவலர் படாதபாடு பட்டார். அந்தோ பரிதாபம்! அன்று இரவு கலங்கரை விளக்கம் - இருளில் கண் அயர்ந்து கிடந்தது.



துறைமுகம் ஆழ்ந்த நித்திரையில் இருந்த நள்ளிரவு நேரம். அதன் விலாசம் தெரியாமல் போகாஹூண்ட்டஸ் என்னும் கப்பல் திக்குமுக்காடியது. வழக்கமாகச் சமிக்கை காட்டும் அந்தக் கலங்கரை விளக்கம் ஒளிவீச தவறியதால், அந்தக் கப்பல் மணல்திட்டை "முத்தமிட" கப்பலின் பின்பகுதி உடைந்தது. அதோடுகூட, பிரயாணிகள் அனைவரும் கடலின் ஆழ்பரப்பில் சமாதியானார்கள். விடியலுக்கு சற்றுமுன், அதேதுறைமுகத்தை நாடி வந்து கொண்டிருந்த ரிச்மண்ட் பாக்கர் என்னும் கப்பலுக்கும் அதேகதிதான். ஆனால், இதில் உயிரச சேதம் அதிகம் இல்லையென்றாலும், கப்டன் மனைவி மட்டும் கடலுக்கு இரையானார்.

1793 ஆம் ஆண்டு முதல் 1833 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பிரிட்டிஷ் கடற்கரையோரங்களில் சேதமடைந்த கப்பல்களின் சராசரி எண்ணிக்கை 550 இல் இருந்து 800 ஆக உயர்ந்துள்ளதெனக் கலங்கரை விளக்கச் சரித்திராசிரியர் டி.ஆலன் ஸ்டீவன்சன் குறிப்பிடுகிறார். சக்திவாய்ந்த விளக்குகள் எந்தளவுக்கு தேவைப்பட்டனவோ, அந்தளவுக்கு இன்னும் நிறையக் கலங்கரை விளக்கங்களும் தேவைப்பட்டன.


அமெரிக்க மாகாணங்கள், இங்கிலாந்து உட்பட, சில நாடுகளில் கடல் பிரயாணம் மிக ஆபத்தாகியது. ஏன்? நிலவைச் சபிப்பவர்கள் என்று அழைக்கப்பட்ட கடற்கொள்ளையர்களாலேயே கப்பல்களை வழிதவறச் செய்து, பாறைகளில் மோதிக்கொள்ளும்படி விளக்குகளை வைப்பதே இவர்களது ஏமாற்றுவித்தை. சேதமடைந்த அக்கப்பல்களை கொள்ளையடிப்பதற்காகவே இப்படிச் செய்தனர்.



**முதல் தீபஸ்தம்பங்கள்.**

இலியட் என்ற புராணக் காவியமே கலங்கரை விளக்கங்களுக்கு முதல் ஆதாரம். "சூரியன் மறைய மறைய, கலங்கரை விளக்கத்திலிருந்து ஒளிக்கற்றைகள் சுடர்விட ஆரமபிக்கும்" என அது சொல்கிறது. "மரக்கட்டைகளை எரித்து, வெளிச்சம் உண்டாக்கினர். சில சமயங்களில் இவை கற்குவியல்மேல் வைக்கப்பட்டன. பிறகு இரும்புக் கூட்டிற்குள் வைத்து, எரியவிட்டனர். இவ்வாறு விட்டுவிட்டு, எரிய வைத்தது, விபத்துக்களை விளைவித்தது. இப்படித்தான் ஆரம்பகால கலங்கரை விளங்கங்கள் இயங்கின" என்று விளக்குகளின் காவலர்கள் (ஆங்கிலம்) புத்தகம் விவரிக்கின்றது.

அலெக்ஸாண்டிரியா தீபஸ்தம்பமே - உலகின் முதல் கலங்கரை விளக்கம். இது எகிப்தின் ∴பாரஸ் தீவில், அதாவது இப்போதுள்ள அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தின் முகப்பில் கட்டப்பட்டது. கல்லால் கட்டப்பட்ட இந்தப் பிரமாண்டமான கோபுரம் - 100 முதல் 120 மீட்டர் (சுமார் 40 அடுக்குகள்) உயரமானது. இதுவரை கட்டப்பட்டவற்றில் மிகஉயரமானது இதுவே. இந்த கலங்கரைவிளக்கம் ஏழு உலக அதிசயங்களில் ஒன்று. அநேகமாக, பூமி அதிர்ச்சியால் 'தாக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது வரை, 16,000 வருடங்கள் நிலைத்தது.' கருங்கடலில் இருந்து அட்லாண்டிக் பெருங்கடல் வரை, குறைந்தபட்சம் 30 கலங்கரை விளக்கங்களை ரோமர்கள் எழுப்பினர். ஆனால், அந்த சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றபோது வாணிபம் நலிவடைந்து, தீபஸ்தம்பங்களாகிய கலங் கரை விளக்கங்கள் இருளடைந்தன.




1699 ஆம் ஆண்டில் ஹென்றி வின்ஸ்டான்லி என்பவரால். கட்டப்பட்டதே, கடல் நடுவே கட்டப்பட்ட முதல் கலங்கரை விளக்கம். இது மரத்தாலானது. இங்கிலாந்தின் துறைமுகப் பட்டணமாகிய ப்ளைமௌத்திற்குச் சற்றுத் தள்ளி, ஆபத்தான எடிஸ்டன் பாறைகள் மேல் இது கட்டப்பட்டது.

நியூயோர்க் துறைமுகத்திலுள்ள 92 மீற்றர் உயரச் சுதந்திரச்சிலை, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய மாகாணங்களின் மக்களுடைய நட்புறவுக்கு நினைவுச்சின்னம். இது, சிறிது காலத்திற்குக் கடற்பயணங்களுக்கு வழி காட்டியாகவும் செயற்பட்டது. 16 வருடங்களுக்கு 3 காவலர்கள் மாறி மாறி காவல் காத்தனர். அவள் கையில் இருந்த தீப்பந்தத்தைத் தொடர்ந்து எரியவிட்டனர். "அவளுடைய கையில் இருக்கும் தீப்பந்தத்தின் மூலம் உலகம் முழுவதும் நல்வரவு கூறுகிறாள்" என்று சிலையின் பீடத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் ஒரு பாடல், அவளுக்குப் புகழாரம் சூட்டுகிறது.

# மட்டுப்படுத்தப்பட்ட திமிங்கில வேட்டை

திமிங்கிலங்கள் உலகில் அழிந்து வருகின்ற கடல்வாழ் உயிரினமாக இருப்பதால், அவற்றைப் பிடிப்பதைத் திமிங்கிலங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பு தடை செய்திருந்தது.



விஞ்ஞான ஆய்வு நோக்கத்திற்காக "மிங்" எனப்படும் ஒரு வகைத் திமிங்கிலங்களை- ஐஸ்லாந்தின் கடலில் பிடிப்பதற்கு அனுமதியை இந்த அமைப்பு வழங்கியிருந்தது.

38 "மிங்" வகைத் திமிங்கிலங்களை ஐஸ்லாந்தின் கடலிலிருந்து பிடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. உலகில் தற்போது 43 ஆயிரம் திமிங்கிலங்களே உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

திமிங்கிலங்கள் - கடலின் மீன் வளத்தை எவ்வாறு பாதிக்கின்றது என ஆராய்வதே, தற்போது மேற்கொளளப்படவுள்ள ஆய்வுகளின் நோக்கமாகும்.



ஐஸ்லாந்தின் பொருளாதாரம் - கடல் வளத்தில்தான் தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பிடிக்கப்பட்ட திமிங்கிலங்கள் விஞ்ஞானப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின், உணவிற்கான இவை விற்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் அநேகமான நாடுகள் - திமிங்கிலங்களைக் கடலிலிருந்து பிடிப்பதற்கு தடை செய்துள்ளன.

# காப்பாற்றப்படும் கடல் கழுகுகள்



கடல் கழுகுகள் அல்லது வெள்ளை நிற வாலைக்கொண்ட கழுகுகள் - உலகில் உள்ள பிரமாண்டமான கழுகு இனத்தில் நான்காவது இடத்தில் உள்ளது.

இதன் விரித்த இறக்கைகளுக்கிடையிலான தூரம் இரண்டரை மீற்றர் வரையாகும். 1918 ஆம ஆண்டளவில், இக்கழுகுகள பூமியிலிருந்து முற்றாகவே அழிந்துவிடும் ஆபத்தான நிலைக்குச் சென்றிருந்தன. இந்தக் கழுகுகள் பாறைகளில் நஞ்சூட்டியும், வேறு முறைகளிலும் கொல்லப்பட்டு வந்தன. இக்கழுகுகள் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்கொட்லாந்தில் கொண்டுவரப்பட்டு, பாதுகாக்கப்பட்டிருந்தன. இப்போது 30 சோடிகள் வரை இங்கு காணப்படுகின்றன.



அடைகாக்கும், முட்டையிடும் காலங்களிலே - இவற்றிற்கு ஆபத்துக்கள் அதிகம் காத்திருக்கின்றன. பலம் மிக்க பெற்றோர்களால் மாத்திரமே குஞ்சுகளைக் காப்பாற்ற முடியும்.




# கிளிகளுக்கும் சரணாலயம்



"ஸ்ரிவ் நிக்கோஷ்" - கிளிகளுக்கான ஒரு சரணாலயத்தைப் பிரித்தானியாவில் அமைத்துள்ளார். தனது பராமரிப்பிலுள்ள எல்லா கிளிகளுக்கும் அவர் பெயர் வைத்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி, பேசுவதற்கும் நன்றாகவே கற்றுக்கொடுத்துள்ளார்.

சிறிய தொல்லைகளைத் தரக்கூடிய கிளிகளைக் கட்டுப்படுத்துவதற்கு, இவருக்குத் தெரிந்த கிளிகளின் மொழி நன்றாகவே உதவுகின்றது.

இவரது சரணாலயத்தில் இருக்கும் கிளிகள், அவற்றின் சொந்தக்காரர்களுக்குப் பிரச்சினைக்குரியதெனக் கருதி, சரணாலயத்தில் கொண்டு வந்து விடப்பட்டவையாகும்.



நாளாந்தம் இவரிடம் பலர் - கிளிகளுடன் வருகின்றார்கள். அவற்றைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கமுடியவில்லை என்று கூறி, கொடுத்துவிடுகின்றனர்.

இவர்களில் அநேகமானோர், வீட்டில் கிளிகளின் சத்தத்தைச்சகிக்க முடியவில்லை எனக்கூறியே சரணாலயத்துக்குக் கொண்டு வருகிறார்கள். நாய்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாக மனிதர்களுடன் வாழ்ந்து பழகிவிட்டது. ஆனால், கிளிகள் இன்னும் தமது இயற்கைக் குணங்களிலிருந்து விடுபடவில்லை எனத் தெரிவிக்கிறார் நிக்கோஷ்.

கிளிகளுடன் வாழப்பழகியுள்ள இவருக்குத் தெரியாதா உண்மைநிலை.

# பூச்சிகள் நீரில் மிதக்கும் மர்மம் என்ன?



அமெரிக்க விஞ்ஞானிகள் நீரில் மேல் நடக்கக்கூடிய ரோபோட் பூச்சிகளை உருவாக்கியுள்ளனர். சில பூச்சியினங்கள் எவ்வாறு தண்ணீரில் அமிழ்ந்து போகாது, மிதந்து செல்கின்றன என்பதை அறிவதற்காகவே இந்த முயற்சி.

இந்த ரோபோட் பூச்சிகளுக்கு- நீரின் மூலக்கூறுகளிடையே உள்ள இழுவிசை, நீரின் மேற்பரப்பில் படலம் ஒன்றை உருவாக்குவதாகவும், அதில் பூச்சிகள் மிதக்க முடிகிறது என்பதையும், இந்த ஆய்வின் மூலம் அறிந்து கொணடனர்.



ஆனால், எவ்வாறு மிதந்த நிலையில் நகர்கின்றன என்பதை மான்ஷ்சஸ்டர் தொழிநுட்ப ஆய்வு நிறுவனத்தின் விஞ்ஞானிகள் அறிவதில், தீவிர ஆர்வம் காட்டினார்கள். பூச்சியின் ஒவ்வொரு காலின் அடிப்பாகத்திலும், நீருடன் தொட்டுக் கொணடிருக்கும், இடத்தில் நீர்ச்சூழல் ஒன்றை அது உருவாக்குவதையும், அதன்மூலம் முன்னோக்கிப் பூச்சி நகர்வதையும் அவதானித்தார்கள். இதன்மூலம், நீரில் மிதந்து செல்லும் ரோபோட் பூச்சிகளை உருவாக்கியுள்ளார்கள்.

# கனடாவில் காட்டுத் தீ



கனடாவின் மேற்குப் பக்கத்தில் அமைந்த பிரித்தானிய கொலம்பியாவின் மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ - 3500 இற்கும் மேற்பட்ட மக்களை இடம் பெயர வைததுள்ளது.

ஒரு வாரத்தின் பின் தான் இவர்கள் தமது இருப்பிடத்திற்குத் திரும்ப முடிந்துள்ளது. இந்தக் காட்டுத் தீயினால் 70 சதுர மைல் பரப்பளவில் இருந்த காட்டு மரங்கள் முற்றாகவே அழிந்து சாம்பலாகி விட்டது. அத்துடன், 60 வீடுகளையும் சேதமாக்கியுள்ளது. இந்தக் காட்டுத்தீ - 8 மில்லியன் கனேடியன் டொலர்கள் பெறுமதியான அழிவை ஏற்படுத்தியுள்ளது. மரம் அரியும் தொழிற்சாலைகள் பலவும் நாசமாகியுள்ளன.

# பனிப்புகார்களூடாக படமெடுக்கும் கமரா



பனிப்புகார்களுக்கு ஊடாகப் படமெடுக்கக்கூடிய "கமரா" ஒன்றை மான்ஷ்சஷ்டர் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள். இக்கமராக்களை நீருக்கடியிலும் பாவிக்கமுடியும். பல விலையுயர்ந்த கமராக்களால்கூட, பனிப்புகாருக்கு ஊடாகப் படமெடுக்க முடியாதுள்ளது.

நீர்துளிகளுக்கூடாக ஒளிக் கற்றைகள் செல்லும் போது, அவையெல்லாம் எல்லாப் பக்கமும் சிதறுகின்றன. நிறப்பிரிகையும் நடைபெறுகின்றது. இந்தக் கமரா சிதறிய ஒளிக்கற்றைகளை இணைத்து, திரும்பவும் விம்பத்தைக் கமராவில் பார்க்க உதவுகின்றது.

பனிப்புகார் உள்ள நாட்களில், விமானங்கள் தறையிறங்கமுடியாதுள்ளன. இக்கமராக்கள்- விமானம் இறங்கவேண்டிய இடங்களை துல்லியமாகக் காட்டுவதால், இலகுவில் விமானங்கள் தரையிறங்க உதவியாக உள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## பந்து இப்போது....?

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தினைப் புலிகள் வலியுறுத்தியதன் பேரில் -

அரசாங்கம் திட்டவரைபு ஒன்றை - புலிகளிடம் கையளித்துள்ளது. சில திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட இந்தத் திட்டவரைபு குறித்து, விடுதலைப் புலிகள் திருப்தியடையவில்லை. ஆயினும், இந்தத் திட்டவரைபினை அடிப்படையாகக் கொண்டு, புலிகள் தாம் ஒரு யோசனையைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதுவரை காலமும் இருந்த நிலைக்கு மாறான வகையில், இம்முறை அரசியல் நகர்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. முன்னரெல்லாம் அரசாங்கத்தினால் ஏதாவதொரு தீர்வுத்திட்டம் முன்வைக்கும்போது - அதில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் புலிகள் ஏற்க மறுத்ததைக் காரணங்காட்டிப் புலிகள் மீது சமாதான விரோதப்பட்டம் சூட்டப்பட்டது.

சர்வதேச ரீதியில், இந்த நிலை புலிகள் தரப்புக்குப் பாதகமானதாக அமைந்தது. ஆனால், இம்முறை புலிகள் மிகக் கவனமாக நடந்துகொள்ள முயற்சிப்பதாகத் தெரிகிறது.

இதனை, புலிகளின் இப்போதைய அரசியல் அணுகுமுறையில் இருந்து, தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகச் சமர்ப்பித்த யோசனையில், போதிய அதிகாரங்கள் இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

சாதாரணமாக - இத்தகைய அதிகாரமில்லாத நிர்வாக சபையை, மிதவாதக் கட்சிகள்கூட ஏற்றுக்கொள்ளமாட்டாது. இராணுவ ரீதியிலும், அரசியல்ரீதியிலும், பலமான நிலையிலிருக்கும் புலிகள் - இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று, எவரும் எதிர்பார்ப்பதில் நியாயமில்லை.

இதனை, அரசாங்கமும் நன்கறியும். இதனால்தான், இடைக்கால நிர்வாக யோசனையை புலிகளிடம் கையளித்த பின்னர், அமைச்சர் பீரிஸ் தெரிவித்த கருத்துக்கள், இங்கே நினைவு கூரத்தக்கது.

இந்த யோசனைகளைப் புலிகள் பரிசீலிக்க நீண்டகால அவகாசம் கொடுக்கலாம் என்றும், இது குறித்த அவர்களின் பதில் குறித்து விரிவாக ஆராய முடியும் என்றும், அவர் தெரிவித்திருந்தார்.

அதாவது, நீண்ட கலந்துரையாடல்கள் மத்தியில்தான், வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகத்தினை ஏற்படுத்த முடியும் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இந்த வகையில்தான், புலிகளும் எடுத்த எடுப்பிலேயே, திட்டவரைபில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, இதனைத் தட்டிக்கழிக்காமல் - மிகுந்த இராஜதந்திர அணுகுமுறையுடன் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

புலிகள் இந்த இடைக்கால நிர்வாக யோசனையை, உடனடியாக நிராகரித்திருந்தால், அதன் அரசியல் விளைவுகள், சர்வதேசத்தின் தலையீடுகள் பாரதூரமானதாக அமைந்திருக்கலாம்.

இத்தகைய தலையீடுகளைத் தவிர்த்திக்கொள்வதற்காக, புலிகள் மிகவும் இராஜதந்திர அணுகுமுறையுடன்கூடிய காய் நகர்த்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை - புலிகளின் தலைமைப்பீடம் நடந்துகொண்ட முறைகள் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை, மக்களிடத்தே ஏற்படுத்தியிருக்கிறது.

அதுமட்டுமன்றி - இம்முறை அரசின் தீர்வு யோசனைகளைப் புலிகளின் தலைமைப்பீடம் தீவிரமாக ஆராய்ந்து, ஆலோசனைகளைத் தயாரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் புலிகள் தயாரிக்கும், திட்டவரைபு பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் சர்வதேச சட்ட நிபுணர்கள் மற்றும் துறைசார்ந்த நிபுணர்களுடனான சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

இந்தச் சந்திப்பில்தான், புலிகள் தரப்பின் யோசனைகள் இறுதிவடிவம் பெற்றுப் புலிகளின் தலைமைப்பீடத்தின் ஒப்புதலுக்காகக் கையளிக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

புலிகளின் இந்த யோசனைகளை - அரசாங்கம் பெற்றுக்கொண்டு, பேச்சுக்களை நடத்த முன்வந்தால், தாமும் பேச்சு நடத்தத் தயார் என, பளையில் நடைபெற்ற கூட்டத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இந்தநிலை - இதற்கு முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபாடான நிலைப்பாட்டைக் கொண்டதாகும். புலிகளின் யோசனைகளை அரசு தீவிரமாக ஆராய்ந்து, விரைவாக முடிவெடுக்க வேண்டியிருக்கும்.

புலிகள் இவ்வாறு நிலைமையைச் சாதகமாக்க, சூழலைச் சரியாகக் கணிப்பிட்டு, காய்களை நகர்த்தியிருக்கிறார்கள். இப்போது புலிகள் ஒரு யோசனையைத் தயாரித்து அதனை அரசாங்கத்துக்கு அனுப்பினால், அதற்கு அரசு என்ன பதில் அளிக்கும்?

புலிகள் கேட்கும் அதிகாரங்களை வழங்க மறுக்குமா? அவ்வாறு மறுப்புத் தெரிவித்தால், புலிகளுக்கு சாதகமான அரசியற் சூழல் உருவாகும். மறுபக்கத்தில் புலிகள் கேட்கும் அதிகாரங்களை முழுமையாக வழங்குவதற்கு, அரசியல் கொள்கைள் இடமளிக்காது.

ஆக இப்போது, புலிகள் அரசின் பக்கத்தில் பந்தைத் தூக்கி அடிக்கத் தயாராகிவிட்டார்கள். இது தம்மீதான பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக, புலிகள் செய்யவில்லை. கடந்தகாலப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கில்தான் இவ்வாறு புலிகள் பந்தை அடிக்கத் தயாராகி வருகின்றனர்.

இந்தப் பந்து சரியான வழியில் சரியான திசையில் சென்றால், அது ஆக்கபூர்வமானதாக அமையும்.

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிலே முஸ்லிம்களுக்கு தனியலகு வேண்டும்

## வவுனியாவில் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

புலிகளிடம் வழங்கப்படும் இடைக்கால நிர்வாகத்தில், முஸ்லிம்களுக்கு தனியானதொரு நிர்வாக அலகு வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியாவிற்கு வருகை தந்திருந்த ரவூப் ஹக்கீம் - பட்டாணிச்சோலைப் பகுதியில் நடந்த நிகழ்வொன்றிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும்போது -

அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தையில், முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவொன்று, தனது தலைமையில் கலந்துகொள்ளுமெனவும், பிரிந்திருக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், ஒரு கட்சியின் கீழ் அணிதிரள வேண்டுமெனவும், ஆனால் - அதாவுல்லா மாத்திரம் இதில் சேர்ந்துகொள்ளமாட்டார் எனவும் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு விஜயம் செய்த, ரவூப ஹக்கீம் பாவற்குளம், சின்னச்செட்டிகுளம், செக்கட்டிப்புலவு, பட்டாணிச்சோலை போன்ற பகுதிகளிற்கும் விஜயம் மேற்கொண்டார்.

# தாதிமாருக்கு சம்பள நிலுவைகள் இன்றேல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர் என எச்சரிக்கை

அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றும் தாதிமாருக்கு, வழங்கப்படாமல் இருக்கும் சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்குவதற்கு, நடவடிக்கை எடுக்காவிட்டால்- தாதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள் எனப் பொதுவைத்திய தாதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சங்கத்தில் அங்கம் வகிக்கும் தாதிகளே, இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாதிமாருக்கு வழங்கப்படாமல் இருக்கும் சம்பளத்தை, உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென, அரசாங்கத்தால் ஏற்கனவே பல குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தபோதும் - எந்தவொரு குழுக்களும் சம்பள நிலுவைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவில்லை.

இதேவேளை, தாதிமாருக்குரிய சம்பள நிலுவைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவேண்டும் என, அரசாங்கத்திடம் காலக்கெடு விதிக்கப்பட்டிருக்கின்றது எனவும்,

இக்காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் - தமக்குரிய சம்பள நிலுவைகளை வழங்காது விட்டால், தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாதிகள் சங்கத்தின் இந்த ஆர்ப்பாட்டம், திறைசேரிக்கு முன்பாகவே நடத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆழியவளை வித்தியாலய அணி உதைபந்தாட்டத்தில் சம்பியன்!

அமரர் முருகானந்தன் ஞாபகார்த்தமாக - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையினரால், மருதங்கேணிப் பகுதிப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில், ஆழியவளை சி.சி.த.க வித்தியாலய அணி சம்பியன் ஆகியது.

இறுதிப்போட்டி, கடந்த புதன்கிழமை வத்திராயன் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது, உடுத்துறை மகாவித்தியாலய அணியை எதிர்த்து - ஆடிய ஆழியவளை சி.சி.த.க வித்தியாலய அணி 2 - 0 என்ற கோல்களினால் வெற்றியீட்டியது.

ஆழியவளை சி.சி.த.க வித்தியாலய மாணவன் ச.சர்வேஸ்வரன், சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பட்டார். (122)

## சமாதானம் வேண்டி உரும்பிராயில் மாபெரும் செபமாலைப் பேரணி!

நாட்டில் ஏற்படுகின்ற வன்செயல்கள் ஓய்ந்து, மக்கள் அனைவரும் - சுபீட்சமாகவும், நிம்மதியாகவும் வாழவேண்டி மாபெரும் செபமாலைப் பேரணி ஒன்று வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை - உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு, திருப்பலியுடன ஆரம்பிக்கும் இந்நிகழ்வானது - மதியம் 2.30 வரை அந்த ஆலயத்திலே தொடர்செபமாலை இடம்பெற்று, தொடர்ந்து 2.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு பலாலி வீதியூடாகச் சென்று, நீர்வேலி பரலோக அன்னை ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

நாட்டில் சமாதானம் மலர, அன்னை மரியாள் என்றும் பரிந்துரைபுரியவும், அவளது வழிகாட்டலும், அரவணைப்பும் எமக்குக் கிடைத்திடவும் வேண்டி, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணியில் - யாழ். குடாநாட்டின் பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு - இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்கள், மீண்டும் தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்வ தற்கு, விசேட வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சிப் பாடசாலைகளில்

# குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளுக்கு யுனிசெப் முப்பத்தேழு இலட்சம் உதவி

போரினால் பாதிப்படைந்துள்ள - தென்மராட்சிப் பிரதேசப் பாடசாலைகளுக்குக் குடிநீர் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, யூனிசெவ் நிறுவனம் - சுமார் 37 இலட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் - தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள 15 பாடசாலைகளில் - கிணறுகள், மலசலகூடங்கள், நீர்த்தாங்கள் எனபன புதிதாக அமைக்கப்படுவதுடன், பழுதடைந்தவற்றையும் திருத்தி கொடுக்கப்படவுள்ளது.

இதற்காக முதற்கட்டமாக - 15 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ள தாக வலயக்கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

நாவற்காடு - கணபதிப்பிள்ளை வித்தியாலயம், வறணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம், பூக்கட்டி அ.த.க.பாடசாலை, மிருசுவில் றோ.க.த.க பாடசாலை, கெற்பலி அ.த.க.பாடசாலை, மந்துவில் சிறி பார்வதி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம், சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலை, நுணாவில் மேற்கு அ.த.க பாடசாலை, எருததிடல் அ.த.க பாடசாலை, வறணி வடக்கு சிவப்பிரகாசம் வித்தியாலயம், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், கல்வயல் சிறி சண்முகானந்தா வித்தியாலயம், கரம்பை குறிச்சி அ.த.க. பாடசாலை, குடமியன் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கே சுகாதார வசதிகளும், குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாக வலயக்கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (122)

## கடற்தொழிலாளர் சங்கத்துக்கு சுழற்சி முறையில் கடனுதவி

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில், கட்டைக்காடு கடற்றொழிலாளர் சங்கம், வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் சங்கம், உடுத்துறை கடற்றொழிலாளர் சங்கம் என்பவற்றுக்கு சுழற்சி முறையில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று கடற்றொழில் சங்கங்களுக்கும், தலா 75 ஆயிரம் ரூபா சுழற்சி முறைக் கடனாக கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் கட்டைக்காடு - சகோதர பகிர்வு வாழ்வு மகளிர் அமைப்பு, வெற்றிலைக்கேணி அந்தோனியார் மகளிர் அமைபபு, உடுத்துறை சகோதர பகிர்வு அமைப்பு ஆகியவற்றுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாவும், செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய மகளிர் அமைப்புக்கு 35 ஆயிரம் ரூபாவும், சுழற்சி முறைக்கடனாக வழங்கப்பட்டுள்ளதாக, கியூடெக் இயக்குநர் சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார். (17)

## முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்!

### பளைப்பகுதியில் நடைமுறையில்

பளைப்பிரதேசத்தில் இயங்கிவரும், 20 முன்பள்ளிகளைச் சேர்ந்த - 325 சிறார்களுக்கு சத்துணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் 12 முன்பள்ளிகளைச் சேர்ந்த - 217 சிறார்களுக்கு, உலக தரிசன நிறுவனமும், 8 முன்பள்ளிகளைச்சேர்ந்த - 108 சிறார்களுக்கு கியூடெக் நிறுவனமும் சத்துணவுகளை வழங்கிவருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுகக் கழகத்தின் - முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகத்தினரால் இந்த முன்பள்ளிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. (122)

# தமிழர் உரிமைக்காய் இறுதிவரை குரல்கொடுத்த மாமனிதர் குமார்

மாமனிதர் குமார் - உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தமிழர்களின் உரிமைக்காக, தியாக உணர்ச்சியுடன் செயற்பட்ட விடுதலைப் புலிகளைப் பகிரங்கமாக - பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்த்துக் கொண்டு ஆதரித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தமிழ்த் தேசிய இளைஞர்கள், முதியவர்கள் உட்படப் பலரின் வழக்குகளில் ஆஜராகி, இலவசமாக வாதிட்டு, பத்து வருடங்களுக்கு மேலாகப் பல அப்பாவி இளைஞர்களுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுத்தார்

பல பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகளை வெல்லக்கூடியதாக அவருக்கிருந்த சட்ட அறிவுமட்டுமல்ல, சிங்களத்தில் சாட்சியமளிக்கும் சிங்கள முப்படை உத்தியோகஸ்தர்களை - சிங்களமொழியிலேயே குறுக்கு விசாரணை செய்யும் ஆற்றல் அவருக்கிருந்ததுமாகும்.

**இன்று குமார் பொன்னம்பலத்தின் 65 ஆவது பிறந்ததினமாகும்**

ஒரு சந்தர்ப்பத்தில் - மேல் நீதிமன்ற நீதிவான் - பயங்கரவாதத் தடைச்சட்ட வழங்குகளில் உங்கள் கட்சிக்காரர் எவரும் விடுதலைப் புலிகள் அல்ல என்று கூறுவது சரியா என்று கேட்டார். அக்கேள்விக்கு உடனடியாக மாமனிதர் கூறிய பதில் -

"உண்மையான விடுதலைப் புலிகளை யாரும் கைதுசெய்ய முடியாது. அவர்களைக் கைதுசெய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், அவர்கள் உடனே சைனைட் அருந்தி, தமதுயிரை மாய்த்து விடுவார்கள்".

இதனைக் கேட்ட நீதிவானும், நீதிமன்றத்திலிருந்த அனைவரும் அதிசயித்துப் போனார்கள்.

இலங்கை - இந்திய அமைதிப் படை இலங்கையில் இருந்தபொழுது, அப்பாவி மக்கள் தடுத்து வைக்கப்பட்டபொழுது, இந்திய அமைதிப்படைக்கு எதிராக, கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அமைதிப்படைத் தளபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வித்து, நீதிமன்றத்தில் வாதாடி, அமைதிப்படைத் தளபதிகளுக்கு எதிராகக் கட்டளை அனுப்பியிருந்தார்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியபொழுது, நீதிமன்றத்தில் வாதாடி, அமைதிப்படைத் தளபதிக்கு எதிராக நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கச் செய்தவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பின்புதான், மாமனிதர் குமார் - அனுரா பண்டாரநாயக்கவைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, இந்தியப்படை சூழ்ந்து கொண்டிருந்த வன்னிக்காட்டுக்குள் சென்று, விடுதலைப் புலிகளைச் சந்தித்து, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தார்.

மாமனிதர் தனதுயிரைத் துச்சமென மதித்து, தானிறக்கும்வரை- ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களாக ஜனநாயகரீதியில் தமிழ்த் தேசிய இனத்தின உரிமைக்காகச் செயலாற்றி, தனது உயிரை அர்ப்பணித்துள்ளார்.

மாமனிதர் குமார் - தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளைப் பெறுவதற்காக, சிங்கள மக்களுக்கும் விளக்கமளிக்க வேண்டுமெனக் கருதி, சுவர்ணவாஹினி ஒளிபரப்புச் சேவையில் பேட்டியளித்திருந்தார்.

அவர், ஒளிபரப்புச் சேவையில் பேட்டி கொடுத்தபின், கொழும்பில் அவர் கைதுசெய்யப்படப்போகின்றார் என்றும், கைதுசெய்யப்படுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்தச் சந்தர்ப்பத்தில் - வெளிநாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக வெளிநாடு சென்றுவிட்டார்.

அவர் - வெளிநாட்டில் இருக்கும் பொழுது, கொழும்பிற்கு திரும்பும் போது விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்வதற்காக, பெரும் பரபரப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில், அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, சிறிது காலம் வெளிநாடுகளில் பிரசாரம் செய்யும்படியும், சிறிதுகாலம் வெளிநாட்டிலிருக்கும்படியும் கூறினேன். அதற்கு அவர் கூறிய பதில்-

"இனவாத அரசாங்கங்களுக்குப் பயந்து நான் வெளிநாட்டிலிருந்து அரசியல் நடத்த விரும்பவில்லை. ஒரு கிழமைக்குள் நான் இங்கு வருவேன்" என்று தொலைபேசியில் கூறியதை, செயலில் செய்து காட்டினார். இதைத் தமிழ்த் தேசிய இனம் என்றும் மறக்கமுடியாது.



குமார் பொன்னம்பலம்

மாமனிதர் குமார் - ஆற்றல்மிகுந்த நியாயவாதி. நீதி, நேர்மை, துணிவு, தியாகம் ஆகியவை கொண்ட ஓர் அரசியல்வாதி. தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகக் கடைசிவரை - குரலெழுப்பிய மாமனிதரின் இழப்பினால், தமிழ்த் தேசிய இனம் - அவருடைய இடத்தை நிரப்பக்கூடிய ஒருவரும் இல்லை என்று எண்ணித் துயரமடைந்தது.

அந்த இடம் யாராலும் நிரப்ப முடியாது என்பதை, பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அன்னாரின் நினைவைத் தமிழ்த் தேசிய இனம் - உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடந்த மூன்று வருடகாலமாக வெளிப்படையாக - செயலிலும், செய்கையிலும் காட்டியிருக்கிறார்கள். ஓர் அரசாங்கத்திற்கு எதிராக ஜனநாயக யுத்தத்தை நடத்தி, தமிழ்த் தேசிய இனத்தின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்றும்,, தமிழ்த் தேசிய இனம் ஏற்றுக்கொண்ட விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் வழங்கப்பட்ட 'மாமனிதர்' என்ற பட்டம், கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, மாமனிதர் என்று பொறிக்கப்பட்ட முத்திரை வெளியிடப்பட்டது.

**க.மு.தர்மராசா**

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 13

*(தோள் உழுவான் நோய் தொடர்ச்சி......)*

ஆலய வீதிகளில் மட்டுமன்றி, வீடுகளிலும் இந்தப் புழுத்தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு - யாழ்ப்பாணத்தில் இன்று காணப்படுகின்றது. எல்லா வீதிகளிலும் நாய் மலக்குவியல்கள் காணப்படுவதும், மோட்டார் சைக்கிள்கள் இவற்றின் மேலால் பயணிப்பதும் சாதாரணமாகி விட்டது.

மோட்டார் சைக்கிள்களை வீடுகளினுள் நிறுத்தும்போது, அவற்றின் அகலமான ரயர்களில் ஒட்டியிருக்கும் நாய் மலத் துணிக்கைகள், வீடுகளின் தரைப்பகுதியில் உதிரவும், பின்னர் வீட்டினுள் நடந்து திரிவோரால் ஏனைய இடங்களில் தரைப்பகுதிக்கும் பரவும் வாய்ப்புண்டு.

சிறு குழந்தைகள் வீட்டினுள் அரைந்தும், தவழ்ந்தும் திரியும்போது - அவர்களுக்கும், நிலத்தில் படுத்துறங்குவோருக்கும் இப்புழுத்தொற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு உண்டு. நிலத்தில் காயப்போட்ட துணிகளை அழுத்தல் செய்யாது பயன்படுத்துவதும் புழுத்தொற்றுக்கு வாய்பை ஏற்படுத்தும்.

அடியார்களின் வசதிகருதிக், கடற்கரை யோரத்திலிருந்து கொண்டுவந்த சுத்தமான மணலை, ஆலய வீதிகளில் பரவி, நீர் தெளித்ததும், ஈரலிப்பு விரும்பிகளான இப்புழுக்கள், பரப்பப்பட்ட மணலின் ஈரலிப்பான மேற்பரப்புக்கு வந்து, பிரதிஷ்டை செய்கின்ற அடியார்களில் தொற்றிவிடும். அவர்களை நித்திரை கொள்ளவிடாது தடுத்தும், தொடர்ந்து சொறியவைத்தும் அவர்களுக்குச் சொல்லொணாக் கஷ்டங்களைக் கொடுக்கும்.

சென்ற வருடங்களில், அங்கப்பிரதிஷ்டை செய்து, இப்புழுத் தொற்றுக்கு ஆளான பலரும் பணவசதிமிக்க குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

இவர்கள் எவ்வளவு பணம் செலவானாலும் தமது உடலில் தொற்றியுள்ள புழுக்களைக் கொன்று விடவேண்டும்மெனப் பல்வேறு வைத்திய நிபுணர்களிடமும் அலைந்தனர். வைத்தியர்கள் இப்புழுவுக்கு இங்கு மருந்து இல்லையென்றனர்.

மிருக வைத்தியர்களிடம் இதற்கு மருந்து இருக்கக்கூடும் என எண்ணி அவர்களிடம்கூடச் சிகிச்சைபெற முயன்றனர்.

மிருக வைத்தியர்கள் தாம் மனிதருக்குச் சிகிச்சை செய்வதில்லை எனக் கூறினார்.

பின்பு ரேடியோ திருத்துபவரிடம் சென்று, ஈயம் ஒட்டும் சூட்டுக்கோலால் புழு இருக்கும் இடங்களில் தோலை சுடுவித்துப் புழுக்களைக் கொன்றனர்.

பின்னர் வைத்தியசாலைகளிலும் மின்சாரச்சூட்டுக் கோலினால் தோலைச் சுட்டே இப்புழுக்கள் கொல்லப்பட்டன. நாய் வளர்ப்பை நெறிமுறைப்படுத்தாவிடில், தோல்துளை புழு என அழைக்கப்படும் இப்புழுவின் தொல்லையை ஒழிக்கமுடியாது. துணிகளின் மேல் நாய் அல்லது பூனை படுத்துறங்கினால், அத்துணிகளை நன்கு தோய்த்து அழுத்தல் செய்த பின்னரே அணியவேண்டும்.

**நாய்ச்சரும நோய்கள்**

நாய்களின் தோலில் பங்கசுத் தொற்றுகளும் பற்றீரியாத் தொற்றுக்களும் ஏற்படலாம். நாய்களுக்கு நாய்க்குட்டை **(DERMODI COSIS)** ஏற்படலாம்.

*(தொடரும்.....)*

ச.ஆ.கோபாலமூர்த்தி

# தொற்றுநோய் பரவும் வழிகளும்: வருமுன் காப்பு வழிமுறைகளும்!

**தொற்று நோய்கள் - ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நேரடித் தொடுகை மூலமோ, தொற்றலடைந்த உணவு, நீரை உட்கொள்வதன் மூலமோ அல்லது காவிகள் மூலமோ பரவக்கூடியவையாகும். இந்த நோய்கள் பற்றிய விழிப்புணர்வும், பரவும் வழிமுறைகளையும் அறிந்துகொண்டு, அதற்கான வருமுன்காப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் - நோயிலிருந்து மட்டுமல்ல, அதன் பாரதூரமான விளைவுகளிலிருந்தும் எம்மைக் காத்துக்கொள்ளலாம்.**

**நெருப்புக்காய்ச்சல் (Typhoid)**

தொற்று நோய்களுள் ஒன்றான நெருப்புக்காய்ச்சலானது - சல்மொனெல்லா ரைபி (f) [**Salmonella typhi**] எனும் பக்றீரியாவினால் [**Bacteria**] ஏற்படும். இது மனிதனின் குடலைத் தாக்கும் ஒரு நோயாகும். வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் அதிகம் காணப்படும் இந்த நோயினால், கூடுதலாகப் பாதிக்கப்படுவது ஐந்து தொடக்கம் 19 வயதிற்குட்பட்ட இளம் வயதினராவர். அத்துடன், ஆண்கள் - பெண்களைவிட ...ற்று அதிகமாக இந்த நோய்த் தொற்றுக்கு ஆளாகின்றனர். மேலும் இந்த நோய்க்கிருமி - மழைகாலம், வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்தும் வேகமாகப் பரவும் ஆற்றலுடையது.

**நெருப்புக்காய்ச்சல் பரவும் முறைகள்**

நோயாளியினதும், நோய்க்காவியினதும் - சலம் மற்றும் மலத்துடன் வெளியேறும் இக்கிருமி - உணவு, குடிநீர் போன்றவற்றைச் சென்றடைந்து, அவற்றை நாம் உட்கொள்வதன்மூலம் இந்த நோயின் தாக்கத்திற்கு உள்ளாகின்றோம். இக்கிருமியானது, ஐஸகிறீம் (**Ice-cream**) போன்ற குறைந்த வெப்பநிலையிலும் வாழும். மேலும் ஈ, கரப்பான் போன்ற பூச்சிகள் - மலத்திலிருந்து பின் உணவில் வந்து அமர்வதன் மூலமும் அவ்வுணவு வழியாகப் பரவும்.

**நெருப்புக்காய்ச்சல் நோயின் நோயரும்புகாலம்**

நோயரும்புகாலம் என்பது கிருமித்தொற்று ஏற்பட்டு, பின்னர் நோய்கான அறிகுறிகள் தோன்ற எடுக்கும் காலம். பொதுவாக நெருப்புக்காய்ச்சலின் நோயரும்பு காலம் 10-14 நாட்களாகும்.

**கிருமித்தாக்கம்**

**Salmonella typhi** எனப்படும் இந்த பக்டீரியா - உணவுடன் உள்ளெடுக்கப்பட்டு, மனிதனின் சிறுகுடற் பகுதியைச் சென்றடைந்து, அங்கு அவை மேலும் பிரிந்து பெருகுவதால், சிறுகுடற்புண்களைத் தோற்றுவிக்கின்றன. இந்த நிலையில், இந்நோயானது இனங்காணப்பட்டு, சிகிச்சை அளிக்காவிடின் நோய்க்கிருமி குருதியில் பிரிந்து, பெருகி - செப்ரிசீமியா (**Septicaemia**), குடலில் துவாரங்கள் ஏற்படல் போன்ற சிக்கல் நிலைமைகளையடைந்து, நோயாளியின் இறப்பிற்கும் வழியமைத்துவிடும்.

**நெருப்புக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள்**

1. ஒரு கிழமைக்கும் மேற்பட்ட, தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் காய்ச்சல்.
2. வயிற்றுவலி
3. தலைவலி
4. வாந்தி, வரட்டு இருமல்
5. மலச்சிக்கல் அல்லது வயிற்றோட்டம் என்பனவாகும்.

**நெருப்புக்காய்ச்சல் வருமுன் காப்பது எவ்வாறு?**

★ அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம். நாம் இந்நோயின் தாக்கத்திற்கு உள்ளாகாமல் வாழலாம். அதாவது-

★ சுகாதார முறைப்படி அமைந்த மலசலகூடங்களில் மலங்கழித்தல் வேண்டும்.

★ மலங்கழித்த பின்னர் சவர்க்காரம் கொண்டு கைகழுவுதல் வேண்டும்.

★ கிணற்றிற்குத் தகுந்த கால இடைவெளியில், உரியமுறைப்படி குளோரினேற்றல் செய்தல் வேண்டும்.

★ குடிநீர் தேவைகளுக்கு - கொதித்து ஆறிய நீரையே எப்போதும் பயன்படுத்த வேண்டும்.

★ சமைக்க முன்னரும், சாப்பிட முன்னரும் - சவர்க்காரமிட்டுக் கைகளை நன்கு கழுவுதல் மூலமும்-

★ உணவுப் பொருட்களை எப்போதும் மூடிவைத்தல் மூலமும்-

★ இலையான், கரப்பான் போன்ற பூச்சிகளை ஒழிப்பதன் மூலமும் -

★ நெருப்புக்காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதன் மூலமும் -

எம்மை நோயிலிருந்து வருமுன் காத்துக்கொள்ளலாம்.

அத்துடன் - திறந்து வைத்த, ஈ மொய்க்கும் சாத்தியமுள்ள உணவுப் பண்டங்களைக் கடைகளில் வாங்கி உண்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

மேலும் சுத்தமற்ற நீரில் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் வகைகள், சர்பத் போன்ற குளிர்பானங்களைப் பருகுதலைத் தவிர்த்தல் மூலமும் நெருப்புக் காய்ச்சல் நோயிலிருந்து தப்பிக்கொள்ளலாம்.

தொற்று ஏற்பட்டு நோய்க்கான அறிகுறிகள் தென்படுமெனில், நோயின் ஆரம்பநிலையிலேயே வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று, சிகிச்சை அளிக்கப்படல் வேண்டும்.



**டெங்கு காய்ச்சல் (Dengue Fever)**

டெங்கு வைரஸினால் ஏற்படுத்தப்படும் இக்காய்ச்சலானது, உலகம் முழுவதும் காணப்படுகிறது. எனினும், நகரப் பகுதிகளிலுள்ள மக்கள் கூடுதலாக இதன் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். இக் காய்ச்சலானது - எடிஸ் எயிப்டி, எடிஸ் அலபோபிக்ரஸ் எனும் இரு வகை நுளம்புகள், மனிதனைக் கடிப்பதன் மூலமே இவை பரவுகின்றன. இது மழை காலத்தில் அதிகம் பரவலடையும் ஒரு நோயாகும். இந்த நுளம்புகள் பகல் நேரங்களிலேயே மனிதனைக் கடிக்கின்றன.

**நோயரும்புகாலம்**

நுளம்பு எம்மைக் கடித்து நோய் தோன்றுவதற்கு இடைப்பட்ட காலம் 5 தொடக்கம் 8 நாட்களாகும்.

**சாதாரண டெங்கு நோயின் அறிகுறிகள**

1. கடும் காய்ச்சல்.
2. தலைவலி, வெளிச்சத்துக்கு வர விரும்பமின்மை.
3. வாந்தி.
4. வயிற்றுளைவு, மலச்சிக்கல்.
5. சிவந்த புள்ளிகள் (முகம், கழுத்து, நெஞ்சுப் பகுதியில் தோன்றல்)

இந்த அறிகுறிகள் தோன்றி, 7 அலலது 8 நாட்களில் நோயின் அறிகுறிகள் குறைந்து, நோய்குணமாகும். எனினும், சிலருக்கு டெங்கு குருதிப்பெருக்கு நோயின்நிலை தோன்றும்.

*(தொடரும்........)*

**திலகம் சிவலிங்கம்
4ம் வருடம்,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்**



ஈராக்கில் சமாதானப் பணிக்காக, புறப்பட்டுச் செல்லும் அமெரிக்கப் படைவீரர் ஒருவர், தனது 5 மாதக் கைக்குழந்தையை முத்தமிட்டு மகிழ்வதைப் படத்தில் காணலாம்

# லைபீரிய ஜனாதிபதி ரெய்லர் நேற்றுப் பதவி விலகினார்!

(மொன்ரோவியா)

லைபீரியாவில் ஒரு தசாப்த காலமாக நடந்த உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில், அந்நாட்டு ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அமெரிக்காவில், நடத்தப்பட்ட சதி நடவடிக்கையின் மூலமே, தான் பதவியில் இருந்து அகற்றப்படுவதாகவும், நாட்டில் இரத்தக்களரியை தடுப்பதறகாகவே தான் பதவியிலிருந்து விலகுவதாகவும் - தனது இறுதி உரையில் அவர் தெரிவித்துள்ளார்.

தனது பதவியை உபஜனாதிபதி மொஸ் பீலாவிடம் நேற்று கையளிக்கவும் ரெயிலர் இணங்கியிருந்தார். இவரது பதவிவிலகல் நிகழ்ச்சியின் போது, தலைநகர் 'மொன்ரோவியாவில்' அமைந்துள்ள மாளிகையைச் சுற்றி மேற்கு ஆபிரிக்கச் சமாதானப் படையினர் காவல்புரிந்தார்கள். இவர் பதவி விலகியபின் எங்கே செல்லவுள்ளார் என்பதைத் தெரிவிக்கவில்லை. இவருக்கு நைஜீரியா அடைக்கலம் கொடுப்பதற்கு முன்வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.



## ஆப்கான் சமாதானப் பணியில் நேட்டோவும் இணைகின்றது!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில், சமாதானப் பணிகளை மேற்கொள்ள நேட்டோ முன்வந்துள்ளது. ஐரோப்பாவிற்கு வெளியே இந்த அமைப்பு பணிபுரிவது இதுவே முதற்தடவையாகும்.

ஆப்கானின் உள்நாட்டு பாதுகாப்பிற்கான பொறுப்பை சர்வதேச பாதுகாப்பு துணைப்படை (IASF) ஏற்ற பின்னர் - வெளிநாட்டு முதலீட்டாளர்கள், வர்த்தகர்களின் வணிக மையமாக காபூல் மாறியுள்ளதாக, ஆப்கான் ஜனாதிபதி ஹர்சாய் தெரிவித்தார்.

பெப்ரவரி மாதத்தில் இருந்து ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் கூட்டுப்படையினர் காபூலில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

தலிபான் போராளிகள் - தொடர்ந்தும் அந்நிய நாட்டு நிதியுதவியளிக்கும் அமைப்புக்கள் மீதும், அரசாங்க நிறுவனங்களின் மீதும் தாக்குதல் தொடுப்பதால் பாதுகாப்பு எல்லைப் பிரதேசங்களை நேட்டோ விஸ்தரிக்கவுள்ளது. இதன் ஒரு பகுதியாக காபூல் உட்பட ஏனைய இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது.

உலகவலம்

## கைகளை இழந்த அலிஅபாஷ் லண்டனுக்கு!



ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் நடத்திய வான் தாக்குதலின்போது, பெற்றோரையும், உறவினரையும் மட்டுமன்றி தனது இரு கைகளையும் இழந்திருந்த அலிஅபாஸுக்கும், இடதுகாலையும், வலது கையையும் இழந்திருந்த அகமட் மொகமட் கம்ஷ என்ற ஒரு வயதுக் குழந்தையையும் செயற்கை அவயவங்களைப பொருத்துவதற்காக, கடந்த வியாழனன்று, குவைத்திலிருந்து லண்டனுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

# மும்பாய் ஹெலி விபத்தில் 20 ஊழியர்கள் உயிரிழப்பு!

மும்பாய் தெற்குப் பகுதியில், எண்ணெய் எரிவாயு கூட்டுத்தாபன ஊழியர்கள் பயணஞ்செய்த ஹெலிகொப்ரர் ஒன்று விபத்துக்குள்ளானதில், 20 ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர்.

அரேபியன் கடலில் அமைந்துள்ள எண்ணெய், எரிவாயு தோண்டும் தளத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே, ஹெலி விபத்தில் சிக்கிக் கொண்டது.

காலநிலை சீராக இல்லாததால், பலியானவர்களின் சடலங்களை மீட்பது கடினமாக உள்ளதென்றும், இதுவரை ஒருவரின் சடலம் மட்டுமே மீட்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான ஹெலி ரஷ்யத் தயாரிப்பான M1- 172 ரகத்தைச் சேர்ந்ததாகும்.



எரிபொருள் தட்டுப்பாட்டால், பஸ்ராவில் ஏற்பட்ட ஆர்ப்பாட்டத்தில், .ரயர்களை வீதியில் போட்டு எரிக்கும் ஈராக்கியர்.



பஸ்ரா நகரில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டால் ஆத்திரமடைந்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஈராக்கியரை, பொல்லுகள் கொண்டு தாக்கமுற்படும் பிரிட்டிஷ் படையினர்.

## பாலித்தீவு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு மரணதண்டனை!

இந்தோனேஷியாவின் பாலித்தீவு குண்டுத்தாக்குதல் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்ட "இமாம் சமுறா" - தனக்கு மரணதண்டனை வழங்கியமைக்காக நன்றி கூறுவதாகத் தெரிவித்திருக்கிறார்.

மரணத்தின் மூலம், கடவுளுக்கு அருகில் செல்லமுடியும் எனக் கூறும் அவர், இந்தக் குண்டுத் தாக்குதலில், இந்தோனேஷிய மக்களும் முஸ்லிம்களும் பலியாகியிருந்தால், தான் மிகவும் வேதனைப் படுவதாகத் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக இவருடன் கைதுசெய்யப்பட்ட மற்றொரு குற்றவாளியான அம்ரோசி - தனக்கு வழங்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்புக்கு எதிராக, மேன்முறையீடு செய்திருக்கிறார்.

# எரிபொருள் வழங்கியதையடுத்து பஸ்ராவில் குழப்பம் தணிந்தது!



(பக்தாத்)

ஈராக்கின் தெற்கு நகரான பஸ்ராவில் - எரிபொருள், மின்சக்தித் தட்டுப்பாட்டால் பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் - எரிபொருள் வழங்குவதற்குரிய ஒழுங்குகளை பிரிட்டிஷ் படையினர் மேற்கொண்டதால், கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில், 2 பேர் உயிரிழந்திருந்தனர்.

ஈராக்கியர்களில் ஒரு பகுதியினர், குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக மின்சாரத்தை நிறுத்தியிருந்தார்கள். மின்விநியோகிக்கப் பயன்படும் பெறுமதிமிக்க செப்புக் கம்பிகளைத் திருடுவதற்காகவே மின்சாரத்தை அவர்கள் நிறுத்தியிருந்தார்கள்.

இதன்காரணமாக, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்காததால், எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

# பிலிப்பைன்ஸ் மோதலில் மூன்று பேர் உயிரிழப்பு!

பிலின்பைன்ஸின் தென்பகுதியில், தீவிரவாதிகளைப் படையினர் முற்றுகையிட்டபோது ஏற்பட்ட மோதலில் 3 பேர் உயிரிழந்தனர், 6 பேர் காயமடைந்தனர்.

பிலின்பைன்ஸின் மிண்டானோ தீவில், தனிநாடு கோரிப் போராடும் போராளிகளுக்கெதிராக அரசபடையினர் போராடிவருகின்றார்கள்.

மணிலா சிறைச்சாலையிலிருந்து சென்ற மாதம் தப்பியோடிய ரோமன் அல்கோஷி என்ற மதத்தலைவரின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்கும், அரசபடையினருக்கும் இடையிலேயே மோதல் இடம் பெற்றது.

# 'ஹிஸ்புல்லா'வின் தாக்குதலால் சிரியா-இஸ்ரேல் முறுகல்நிலை!

லெபனானில் இயங்கும் 'ஹிஸ்புல்லா' போராளிகள் நடத்திய விமான எதிர்ப்பு பீரங்கித் தாக்குதலில், இஸ்ரேலிய சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக - சிரியாவை, இஸ்ரேல் கண்டித்துள்ளது.

'ஹிஸ்புல்லா' போராளிகளுக்கு சிரியா ஆதரவளித்து வருவதாக, குற்றஞ்சாட்டியே இஸ்ரேல் சிரியாவைச் சாடியுள்ளது.

சிரியாவின் எல்லையில் இருந்து மேலும் தாக்குதல் தொடர்ந்தால், கடுமையான எதிர்த்தாக்குதலை சந்திக்க சிரியா தயாராக இருக்க வேண்டுமென இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சீவ்பொயிம் தெரிவித்தார்.

தென் லெபனான், 22 ஆண்டுகளாக இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருந்தது. 2000 ஆம் ஆண்டு மே மாதம் அ[illegible]விலேயே இஸ்ரேல் தனது படையை அங்கிருந்து விலக்கியிருந்தது.

இதனிடையே, இஸ்ரேலின் எச்சரிக்கை தொடர்பாக லெபனானின் தலைநகரில் இருந்து கருத்துத் தொ[illegible]வித்த ஹிஸ்புல்லா போராளிகள் அமைப்பு, தமது வான்பரப்பில் இஸ்ரேலிய விமானங்கள் பறந்தால், விமான எதிர்பு ஏவுகணைத் தாக்குதல் தொடருமென எச்சரித்துள்ளது.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# கிணற்று துலா தலையில் விழுந்தது; குடும்பஸ்தர் பரிதாபகரமாக மரணம்!

கிணற்றுத் துலா முறிந்து விழுந்ததில், மானிப்பாய் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மானிப்பாய், சங்குவேலியைச் சேர்ந்த சதாசிவம் இராஜதுரை (வயது 58) என்பவரே மரணமானவராவார்.

இதுபற்றித் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் கிணற்றில் இவர் நீர் அள்ளிக் கொண்டிருந்தபோது, திடீரெனத் துலா முறிந்து விழுந்து, தலையில் பலத்த காயமடைந்தார்.

இவரை, உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அவசர சிகிச்சை அளித்தபோதும், அது பலனளிக்காது அவர் நேற்று மரணமடைந்தார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர், உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

# நைஜீரியப் பெண்கள் இருவர் மன்னாரில் வைத்துக் கைது!

உள்நாட்டு யுத்தத்தினால் இடம்பெயர்ந்து வந்திருந்த நைஜீரியா நாட்டுப் பெண்கள் இருவர், மன்னார் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

நைஜீரிய நாட்டவர்களான ஒசியா எவிலின் (வயது 21), டயோனா ஓமிறி (வயது 22) ஆகிய இருவருமே, நேற்று முன்தினம் கைசெய்யப்பட்டவர்களாவர்.

நைஜீரியாவில் நடைபெற்றுவரும உள்நாட்டு யுத்தத்தினால் அச்சமடைந்த இவர்கள் - இலங்கைக்கு வந்திருப்பதாகவும், நீண்டகாலமாக இலங்கையின் தென்பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் தங்கியிருந்ததாக, பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தெரியவந்தது.

இவர்கள் மீரிஹான தடுப்பு நிலையத்தில் இருந்து தப்பி - மன்னாருக்கு சென்றிருந்தபோது, அங்குவைத்து கைதுசெய்யப்பட்டனர்.

மன்னார் பதில் நீதிவான் முன் இவர்களை ஆஜர்செய்தபோது, மீரிஹான தடுப்பு நிலையத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால்

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது!

(கொழும்பு)

சிறி ஜெயவர்த்னபுர பல்கலைக் கழகத்தில் சகல பீடங்களுக்குமான விரிவுரைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன், சகல பீடங்களுக்குமான பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் கல்வி சாரா ஊழியர்கள், இன்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதையடுத்தே - இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி நடவடிக்கைகளும், பரீட்சைகள் நடைபெறும் திகதிகளும் விரைவில் அறிவிக்கப்படும் என, பல்கலைக்கழக உபவேந்தர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காணி...

தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும்படி, சம்பந்தப்பட்ட விளையாட்டு அதிகாரிகளுக்கு தெரிவிக்கும்படி - காணி அமைச்சரால் யாழ். அரச அதிபர் பத்மநாதனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது, காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம், உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களின் மறியற்போராட்டத்தையடுத்து - யாழ்.செயலகத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் இறுதி நேரத்தில் இரத்தானது.

இதுபோன்ற எதிர்ப்பு காணி அமைச்சருக்கும் ஏற்படலாமென கருதப்பட்டதாலேயே, அமைச்சர் தனது வருகையை இரத்துச்செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சர்வதேச...

பணிப்பாளர் புலித்தேவனும் கலந்து கொண்ட இந்தப் பேச்சுக்களில், பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்தும், நிதியுதவித்திட்டங்கள் குறித்தும், அவற்றைச் செயற்படுத்துவது தொடர்பாகவும் - விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இடைக்கால நிர்வாக யோசனை விடயத்தில் - புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்துகொள்வதற்காகவும், சர்வதேச நாணயநிதியப் பிரதிநிதி, இந்த விஜயத்தைப் பயன்படுத்தியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், தமிழ்ச்செல்வன் - சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து, இரு தரப்புக்களும் தகவல்களை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க

# உலக வங்கியிடமிருந்து தொண்ணூறு கோடி உதவி

ஆங்கில ஆசிரியர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக, உலக வங்கியிடமிருந்து 90 கோடி ரூபா நிதியுதவி கிடைத்துள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி - ஆங்கில மொழிப்பயிற்சிப்போர் திட்டங்களை அமுல் செய்வதற்கும், ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்தார்.

கேகாலையில் நடந்த வைபவமொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தொிவித்தார்.

இவ்வாண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் முடிவுகளின்படி - பல்கலைக்கழகத்துக்கு அனுமதிபெற 90 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தகுதி பெற்றவர்களாக இருந்தபோதும், 12 ஆயிரம் பேரை மாத்திரம் பல்கலைக கழகத்திற்குச் சேர்த்துக்கொள்ள முடிகிறது. கடந்த காலத்தில் இடம்பெற்ற கல்விச் சீர்கேடுகளே இதறகுக் காரணமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இன்று....

பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சியில் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், உடனடியாக கொழும்பு சென்று - விடுதலைப் புலிகளிடம் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கத்துக்கு, இவர் விளக்குவார்.

இவருடன் நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கிளிநொச்சி வரவுள்ளார்.

### மடுமாதா....

அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மடுமாதா ஆலய வருடாந்த உற்சவமான எதிர்வரும் 15 ஆம் திகதி- ஆறு இலட்சத்திற்கும் குறையாத யாத்திரிகர்கள் கலந்துகொள்வார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாக, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

### இலங்கை...

பிரதமர், வர்த்தகசபைக் கூட்டத்தில் நேற்று உரையாற்றினார். அப்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பரஸ்பர பொருளாதார உறவுகள் பிராந்திய பொருளாதார விவகாரங்கள் குறித்து பல கருத்துக்களை வெளியிட்டார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பற்றியும் பிரதமர் எடுத்துரைத்தார்.

### தமிழரின்....

கைகளை எதிர்த்தே - இந்த அறிக்கைகள் வெளிவந்துள்ளன.

ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் இன்னும் முகாம்களில் தவிப்பதோடு - பசி, நோய், சுகாதாரமின்மையால் பலர் தினம் தினம் மடிகிறார்கள். இதிலே குழந்தைகள், வயோதிபர், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட பல வயதினரும் அடங்குகிறார்கள்.

இதற்கான எந்தவித மாற்றுத் திட்டத்தையோ, உதவிப்பணிகளையோ, இதுவரை அரசு முன்னெடுக்காதது தென்னிலங்கையில் பல நிர்மாணப்பணிகளிலும், நவீன மயமாக்குதலிலும் - அரசு மும்முரமாக ஈடுபட்டுவருவதைக் கண்டுகொள்ளாத அமெரிக்காவும், மனித உரிமைகள் அமைப்பும் - அவசியமற்ற விடயங்களில், விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுத்துச் சமாதானப் பேச்சுக்களுக்கு மறைமுகக் குழப்பங்களை உண்டுபண்ணுவதைச் சுட்டிக்காட்டியுள்ள இவ்வமைப்புக்கள் இத்தகைய செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்துள்ளன.

இத்தகைய கண்டனங்கள், தமக்கு அதிர்ச்சி தருவதாகக் குறிப்பிட்டுள்ள இந்த அறிக்கை, தற்போதைய அபிவிருத்திப் பணிகள் பற்றியும், நடைமுறை நிர்வாக நிலைமை குறிதது‌ம் புதியதொரு ஆய்வறிக்கையை- அமெரிக்காவும், மனித உரிமை நிறுவனமும் தயாரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

# நாடு சுதந்திரமடைந்த பின்னரே இனரீதியான விரிசல் தோன்றியது

## ராகுல லங்கா தேரர்

(கொழும்பு)

இந்த நாடு சுதந்திரமடைந்த பின்னரே - இன ரீதியிலான விரிசல்கள் ஏற்பட்டதாக, பளுகஸ்தமுன ராகுல லங்கா தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த 55 வருட காலப்பகுதிக்குள் - நாட்டின் அரசியல் தலைவர்களே இனங்களுக்கிடையிலான குரோதங்களை ஏற்படுத்தியுள்ளனர் என, அவர் மேலும் தெரிவித்தார்.

வெலிகந்த பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வமத அனுஷ்டான நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை, மிகவிரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு - நாட்டில் நிரந்தர சமாதானம், சுபீட்சம், இனங்களுக்கிடையிலான ஐக்கியம் என்பன ஏற்படவேண்டுமென்று - விசேட பிரார்த்தனை ஒன்றும் விழாவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னம்பிட்டி சோதனைச்சாவடியில் பொலிஸாரால் இளைஞன் கைது!

## ஜெலிக்நைட் குச்சிகள் வைத்திருந்தாராம்

மன்னம்பிட்டி பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து, இளைஞர் ஒருவரிடமிருந்து ஜெலிக்நைட் குச்சிகளைக் கைப்பற்றியதாக, பொலனறுவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நற்பிட்டிமுனையைச் சேர்ந்த ராஜன் ஜெயசீலன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் வைத்தே ஜெலிக்நைட் குச்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக, இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 10 கிலோ எடையுள்ள 84 குச்சிகள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கும் பொலிஸ் அதிகாரி, கைப்பற்றப்பட்ட ஜெலிக் நைட் குச்சிகள், பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலனறுவை மாவட்ட நீதிவான் சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

### கத்தோலிக்க மாணவருக்கு வினா - விடை போட்டி

கத்தோலிக்க மாணவர்களுக்கான வினாவிடைப் போட்டி, எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இப் போட்டியானது பங்கு ரீதியாகவும், கோட்ட ரீதியாகவும், மறை மாவட்ட ரீதியாகவும் நடைபெறவுள்ளது.

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்றும், இது தொடர்பான மேலதிக விபரங்களை - ஒவ்வொரு பங்குகளிலும், பங்குத் தந்தையர் மூலம் அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (91)

# கசப்பான நினைவுகள்...

சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் இது தொடர்பாக, அரசுககு அறிவித்துள்ளதாகவும் -

இக்கண்ணிவெடி அகற்றும் பணிக்கு வருகைதரவுள்ள - இந்தியாவின் இரு கண்ணிவெடி அகற்றும் பிரிவுகளாகிய 'கொரை சோன்', 'சர்வரார்' ஆகியன, பதவிகளில் இருந்து இளைப்பாறிய இந்திய இராணுவத்தினரைக் கொண்டுள்ளது. இவர்களில் சிலர் 1987 - 1990 காலப் பகுதியில் இந்திய அமைதிகாக்கும் படையினர் இங்கு நிலைகொண்டிருந்தபோது, படையில் கடமை புரிந்தவர்கள் எனவும் அறியப்பட்டுள்ளது.

இதனால்,. இவர்கள் வடக்கு - கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவது - தமிழ்மக்கள் மத்தியில் வேதனையான விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால், 'கொரை சோன்' பிரிவின் தலைவர் ஜெனரல் 'சசிகாந் பட்டர்' - தமது கண்ணிவெடி அகற்றும் பிரிவில் உள்ளவர்களுக்கு, இங்கு வாழ்ந்த அனுபவங்கள் இல்லையென்றும், மனிதநேய சேவைதான், தமது நோக்கமெனவும் தெரிவித்தார்.


# பணிநிலை வெற்றிடம்

**1. இயந்திர இயக்குநர்கள்**

இரண்டு வருட அனுபவத்திற்குக் குறையாத "சொலோனா ஓவ்செற்" மெசின் இயக்கக்கூடியவர்கள், தகுந்த ஆவணங்களுடன் 13.08.2003 அன்று காலை 10 மணிக்கு நேரில் சமுகம் தரவும். சம்பளம் நேரில் பேசித தீர்மானிக்கப்படும்.

**2. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள்**

எமது நிறுவனத்தில் இரவு, பகல் கடமையாற்றக்கூடிய மேற்கூறிய பதவிகளுக்கான ஊழியர்கள் தேவை. தகுதியுடையோர் சான்றிதழ்களுடன் 13.08.2003 அன்று காலை 11 மணிக்கு சமுகம் தரவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு,
இல. 267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

A/L 2004
DAY CLASS
(கலை வர்த்தகப் பிரிவுகள்)

ஆரம்பம்:-
கலை 16.08.2003 - சனி
வர்த்தகம் 18.08.2003 - திங்கள் ] 8.30 பு.நே

DMI
யாழ்நகர்

(சி-1338)


# மரண அறிவித்தல்

## சதாசிவம் இராஜதுரை

சங்குவேலி தெற்கைச் சேர்ந்த சதாசிவம் இராஜதுரை அவர்கள் 11.08.2003 நேற்று (திங்கட்கிழமை) அகாலமரணமானார்.

அன்னார் மகிழ்மலர்தேவியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன் (கனடா), நிரோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 12.08.2003 இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 4.30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.* (சி-1340)

தகவல்:
மகிழ்மலர்தேவி
(மனைவி)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.